பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 03 வியாழக்கிழமை 15.02.2018 கதிர் 102

## விக்கி - கஜேந்திரகுமார் நேற்று முக்கிய சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப் .15

தேர்தலின் பின்னர் சமகால அரசியல் நிலைமை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் இடையே நேற்று முக்கிய சந்திப்பு ஒன்று பக்கம் 18

# யாழ். உட்பட மூன்று சபைகளில் காங்கிரஸ் ஆட்சியமைக்க முயற்சி

## கஜேந்திரகுமார் நேற்று அதிரடி அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

"யாழ்.மாநகர சபை, நல்லூர்ப் பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேச சபை ஆகியவற்றுக்குத் தெரிவாகியுள்ள வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் எம்முடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்கள் அவ்வாறு முன் வந்தால் அந்தச் சபைகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்) பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் உள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் சரியாகப் பயன்படுத்துவோம்."

- இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். பக்கம் 18

## இளம் குடும்பப் பெண் நேற்று மர்மக் கொலை!

### வட்டக்கச்சியில் சம்பவம்



கிளிநொச்சி, பெப். 15

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்ட நிலையில் சடல பக்கம் 18

## ஐ.ம.சு.மு. ஆட்சிக்கு மிகத் தீவிர முயற்சி!

### ரணிலும் விடாப்பிடி

கொழும்பு, பெப். 15

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கவிழ்த்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை உரு வாக்கும் முயற்சியில் சில தரப்புக்கள் தீவிரமாக இறங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தனக்குள்ள பெரும்பான்மையை நிரூபித்து ஐக்கிய தேசிய முன்னணியின் பக்கம் 03

## கொள்கையில் அனைவருமே ஒற்றுமைப்படுவது அவசியம்

### முதல்வர் விக்கியும் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், பெப் .15

உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சி அமைப்பதில் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில், தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவேண்டும். கொள்கையில் நாம் யாவரும் ஒற்றுமைப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

-இவ்வாறுவலியுறுத்தியுள்ளார் பக்கம் 18

## பிரதமராவதற்கு கரு, சஜித் மறுப்பு

கொழும்பு, பெப் .15

கூட்டு அரசுக்குள் எழுந்துள்ள குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், சபா நாயகர் கரு ஜயசூரியவை அல்லது அமைச்சர் சஜித் பிரேமதாஸவைப் பிரதமராக நியமிக்கும்படி முன்மொழியப்பட்ட யோச பக்கம் 03

## நிலநடுக்கத்தை உணர்ந்துள்ள தமிழரசுக்கட்சித் தலைமைகள்

### தேர்தல் முடிவு குறித்து வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், பெப். 15

"உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் அரசுக் கட்சியையும் அதன் தலைமைகளையும் தம்மைத்தாமே கேள்வி கேட்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளியுள்ளது என்று கூறலாம். அசைக்கமுடியாது என்றிருந்தவர்கள் நிலநடுக்கத்தை அனுபவித்துள்ளார்கள்."

- இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் வடக்கு பக்கம் 18

## சபைகளில் சகல கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்படுங்கள்

### கூட்டமைப்பு கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப் .15

உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உட்பட ஏனைய கட்சிகள் மற்றும் சுயாதீன உறுப்பினர்கள் புரிந்துணர்வுடன் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட் பக்கம் 18

## கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் சாவு! பலர் படுகாயம்!!

### கிராண்ட்பாஸில் துயரம்



கொழும்பு, பெப் .15

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் பக்கம் 03

## யாழ். மாநகர முதல்வராக ஆர்னோல்ட் நேற்றுத் தெரிவு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் ,பெப்.15

யாழ். மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மைப் பலத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் பக்கம் 18

## எதிர்க்கட்சி உரிமையை எம்மிடம் வழங்குங்கள்

### சபாநாயகரிடம் கூட்டு எதிரணி கோரிக்கை

கொழும்பு, பெப். 15

எதிர்க்கட்சி என்ற உத்தியோகபூர்வ உரிமையைக் கூட்டு எதிரணிக்கு வழங்குமாறு சபாநாயகரிடம் கோரியுள்ளார் அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை பக்கம் 18

## இனிது ரகசியம் அல்ல!

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியமைக்காகத் தன்னைத்தானே இப்போது நொந்து கொள்கின்றாராம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த ஜனாதிபதித் பக்கம் 03

# கோட்டா கைதைத் தடுக்கும் உத்தரவை நீடித்தது நீதிமன்று



கொழும்பு, செப். 15

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கைது செய்வதைத் தடுத்து நிறுத்தி மேன்முறையீட்டு நீதி மன்றம் விதித்துள்ள தடையுத்தரவு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

இதன் போது கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் ஆஜரான சட்டத்தரணி தனது தரப்புவாதி கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையிலான தடை யுத்தரவை நீடிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் தடையுத்தரவை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் தமது பெற்றோரான டி.ஏ. ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாருக்கு அருங்காட்சியகத்தை நிர்மாணித்தில் அரச பணத்தைத் தவறாகப் பயன்படுத்தினார் எனகோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்ய முயற்சித்து வருகின்றனர் என்பது குறிப்பிட்டத்தக்கது.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியை கேக் வெட்டிக் கொண்டாடினார் மஹிந்த!



கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்ற வெற்றியை கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளனர்.

கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் ஒன்று கூடிய கூட்டு எதிர்க்கட்சியினர் கேக் வெட்டி வெற்றியை கொண்டாடியுள்ளனர்.

ஒருவருக்கு ஒருவர் கேக் துண்டுகளை ஊட்டித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் என முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக பங்களிப்பு வழங்கிய மைக்காக மஹிந்த ராஜபக்ஷ, கூட்டு எதிர்க்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியின் கோட்டையான பொலன்னறுவையில் நான்கு தொகுதியை வெல்ல உதவிய நாடாளுமன்றஉறுப்பினர் ரொஷான் ரணசிங்கவுக்கு மஹிந்த ராஜபக்ஷ விசேட நன்றியைத் தெரிவித்துள்ளார்.

## அம்பலாங்கொடையில் புதிய புற்றுநோய் விடுதி!

கொழும்பு, பெப். 15

அம்பலாங்கொடை அரச வைத்தியசாலையில் புதிதாகப் புற்றுநோய் விடுதி தொகுதி தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அங்கு புற்றுநோய்க்கான சிகிச்சைகள் மாத்திரமே நடைபெற்று வந்தன என அம்பலாங்கொடை வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(க)

## செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு!



கொன்ஸ்டன்டினோஸ் மொர்டோபொலோஸ் தலைமையிலான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் மூவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை சந்தித்தனர்.

இராணுவத் தலைமையகத்தில் இராணுவ தளபதியின் பணிமனையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இராணுவத் தளபதியுடனான இந்தச் சந்திப்பின் போது வடக்கு மற்றும் கிழக்கு தொடர் பான விடயங்கள் ஆராயப்பட்டது. மேலும் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இராணுவத்தின் செயற்பாடுகள் மற்றும் பணிகள் விஸ்த்தரிக்கும் விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது லெப்டினென்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு இராணுவத்துடன் இணைந்து ஆற்றிய சேவையைக் கௌரவித்துத் தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்தார்.

## தெஹிவளை – கல்கிஸையில் ஆட்சியமைப்பதில் சிக்கல்!

கொழும்பு, பெப். 15

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுக்கு அமைய தெஹிவளை - கல்கிஸை மாநகர சபையில் ஆட்சியமைப்பதில், ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன எனக் கூறப்படுகிறது.

தேர்தல் முடிவுகளுக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சி 36 ஆயிரத்து 85 வாக்குகளைப் பெற்று 15 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 36 ஆயிரத்து 29 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

விகிதாசார அடிப்படையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 4 மேலதிக ஆசனங்களும், பொதுஜன பெரமுனவுக்கு 5 மேலதிக ஆசனங்களும் கிடைத்துள்ளன. இதற்கு அமைய இரண்டு கட்சிகளுக்கும் தலா 19 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

அதேவேளை, இந்த மாநகர சபைக்குப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 10 ஆயிரத்து 956 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

இவ்வாறான நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சி, பொதுஜன பெரமுனவுடனோ கூட்டணி சேர்ந்தால் மாத்திரமே மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியும்.

எவ்வாறாயினும் எந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை.

தெஹிவளை -கல்கிஸை மாநகர சபையில் ஏற்பட்டுள்ள நிலைமையானது தேர்தல் முறையில் காணப்படும் அடிப்படையான சிக்கலை வெளிக் காட்டியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே மாநகர சபையில் ஆட்சி யமைக்கும் பலம் கிடைத்துள்ளது. வெற்றி பெற்ற கட்சிக்கு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போகும் நிலைமையானது மிகவும் கவலைக்குரியது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(க)

## திருக்கேதீச்சரம் ஆலயத்தின் மகா சிவராத்திரி பெருவிழா பக்தர்கள் கூட்டம் அலைமோத சிறப்பாக இடம்பெற்றது





மன்னார், பெப். 15

மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் மகா சிவராத்திரிப் பெருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் நேற்றுமுன் தினம் மகா சிவராத்திரிப் பெருவிழா நிகழ்வுகள் மிக சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளன.

நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் இடம்பெற்ற மகா சிவராத்திரிப் பெருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பகல், இரவு விசேட பூசைகளும் இடம் பெற்றன. மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு விசேட போக்கு வரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, பாதுகாப்பு, குடி தண்ணீர், சுகாதாரம் மருத்துவம் உள்ளிட்ட வசதிகளும் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பல நூற்றுக்கணக்கான பொலிஸாரும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(க–112)

# அடுத்த வெசாக்குக்கு முன் நல்லாட்சி முற்றுப் பெறும்

## மஹிந்த ராஜபக்ஷ ஆருடம்

கொழும்பு, பெப். 15

ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு அடுத்த வெசாக் போயா தினத்துக்குள் முற்றுப் பெறும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் உள்ள விகாரையில் காலஞ்சென்ற பெல்லன்வில விமலரத்ன தேரரின் நினைவுதின நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பின்னர், சமகால அரசியல் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அரசின் ஆயுள் இன்னும் இரண்டுவருடங்கள் இல்லை. அடுத்த வருடம் நல்லாட் சியின் ஆயுள் நிறைவடைகிறது. 500 நாள்களாகின்றன. இன்னும் இருப்பது சொற்ப நாள்களே யாகும். இன்னும் ஒரு வெசாக் போயா தினமே இருக்கிறது. நாங்கள் பல சேவைகளை செய்திருக்கின்றோம். நாட்டை கட்டியெழுப்பியிருக்கின்றோம். போரை முடிவுறுத்தியதன் விளைவாகவே விகாரைகளுக்குப் பக்தர்கள் வர முடிகிறது.

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சுதந்திரமாகச் செயற்படவும், எமக்கு விரோதமாகச் சரி வாக்களிப்பதற்கும் பலம் கிடைத்திருப்பது விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியில் தோற்கடித்தமையிலாகும். அப்படியான போரை முடிவுறுத்தி அனைத்துத் துறைகளையும் அபிவிருத்தி செய்தது எமது அரசாகும்.

நல்லாட்சி அரசின் இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் அளித்த ஆணையை மதித்து, புரிந்து கொள்வதை விடவும் 113 உறுப்பினர்களை ஏற்படுத்தி அரசை அமைப்பது குறித்து அரசு சிந்திக்கக்கூடாது. அதுவே மகாநாயக்க தேரர்களதும் கருத்தாகும்.

கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையும், லிபரல் இனவாதத்தை நோக்கிச் செல்லும் அரசு குறித்து அண்மையில் விளங்கப்படுத்தினார். இவற்றுக்கு எதிராக மக்கள் அளித்த வாக்கு குறித்து அரசு சிந்திக்க வேண்டும். – என்றார். (ஐ)

### ஐ.ம.சு.ம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசை நிறுவுவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீவிரமாக உள்ளார் என ஐ.தே.க. வட்டாரங்கள் கூறின.

இந்நிலையில் ஆட்சி யாருடைய கையில் போய்ச் சேரும் என இன்னும் இரண்டொரு தினங்களில் தெரிய வரும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறின.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள அமைச்சர் ஒருவரைப் பிரதமராக நியமித்துப் புதிய அரசு ஒன்றை அமைக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

எழுத்து மூலமான அந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடக அமைப்பின் செயலாளர் திலங்க சுமதிபால நேற்றுச் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமையிலான அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக யோசனையொன்றை முன்வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஐ.ம.சு.கூ. பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர மற்றும் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் இணைந்து கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையை அடுத்து பல்வேறு கட்சிகளும் தமது வியூகங்களை வகுத்துச் செயற்படுகின்றன. அந்த வகையிலேயே ஐ.ம.சு.கூ. இவ்வாறான வியூகத்தை அமைத்திருக்கின்றது.

நாங்கள் நிமல் சிறிபால டி சில்வாவைப் பிரதமராகக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு ஒன்றை அமைப்பதற்கு முயற்சிக்கின்றோம். இதற்காக நாம் சிறுபான்மைக் கட்சிகளை நாடியுள்ளோம். அத்தோடு கூட்டு எதிரணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களுடனும் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம். – என்று சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் கட்சிகள், மனோ கணேசன் உள்ளிட்டோரின் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய ஐக்கிய தேசிய முன்னணியில் 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 96 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 55 உறுப்பினர்கள் மஹிந்த தலைமையில் கூட்டு எதிரணியாகச் செயற்படுகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி அமைப்பதற்கு மைத்திரிபால சிறிசேன ஆதரவளிக்காவிடின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நிபந்தனையுடன் ஆதரவளிக்க மஹிந்த அணியினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்க மேலும் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனோ கணேசன் தலைமையிலான முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தற்போதைய கூட்டு அரசைக் கவிழ்த்து அமைக்கப்படும் எந்தவொரு அரசுக்கும் ஆதரவு வழங்குவதில்லை என அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்கிறார். மேலும் மஹிந்த ராஜபக்ஷ அங்கம் வகிக்கும் அரசில் முஸ்லிம் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையமாட்டார்கள்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களை மைத்திரிபால சிறிசேன பக்கம் இணைத்து அரசமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் பொது எதிரணி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை இறக்குவதற்கு சிபாரிசு செய்த எல்லோரிடமும் தனது எரிச்சலை இப்போது கொட்டித் தீர்க்கிறாராம் ரணில்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளோடு 'நல்லாட்சி' அரசுத் தரப்பின் பங்காளிகள் இடையே ஊடல் பறந்து விட்டது. ஐ.தே.க. – சு.க. தேனிலவு முடிந்து விட்டது. இனி என்ன? மணவிலக்குத்தானே! விவாகரத்துக்கு இரு தரப்பும் தயார்.

ஆனால், எதிரும், புதிருமாக இருந்த இந்த இரண்டு தரப்புகளையும் சேர்த்துப் பிடித்து, ஒன்றாக்கி, திருமணத்தை நடத்தி வைத்த பெற்றோர்களாகிய சர்வதேச சமூகம் விடுவதாக இல்லை. விவாகரத் துக்கு விடுவதில்லை எனப் பெற்றோர்கள் ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

தேனிலவுக் காலத்தில் மென்மையாய், அன்பாய், பண்பாளனாய்த் தெரிந்த கணவனின் உண்மைச் சொரூபத்தை இப்போது மணவிலக்கு என்றளவுக்கு ஆகிவிட்ட பின்னர்தான் உணர்ந்து கொண்டுள்ளார் போலும் மனைவி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடும் போக்குக் கண்டு இப்போது திகைத்துப் போயிருக்கின்றார் ரணில் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

'திருமணத்தை' சட்டுப்புட்டென்று பேசி முடித்து வைத்தவர்களில் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

மைத்திரியின் போக்குக் குறித்து சந்திரிகாவிடம் முறையிடலாம் என ரணில் யோசித்தாராம். ஆனால் சந்திரிகாவோ லண்டனில். தனது சொந்த இடமான அத்தனகல்லவிலேயே மஹிந்தரிடம் – கட்சியிடம் – சந்திரிகா சார்ந்த சு.க. அடிவாங்கிச் சுருண்டு விட்டது. இந்த நிலையில் சந்திரிகாவின் பேச்சு மைத்திரியிடம் எடுபடாது என்கின்றன விடயமறிந்த தரப்புகள். அதனால் சந்திரிகாவிடம் முறையிடும் எண்ணத்தைக் கைவிட்டுள்ளாராம் ரணில்.

சு.கட்சியில் மஹிந்த ராஜபக்ஷவின் கடும் எதிர்ப்பாளர்கள் சுமார் ஒரு டசின் பேர், சு.க. – மஹிந்தவின் பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து செயற்படுவதை வரவேற்கவில்லை. அப்படி சேர்ந்து செயற்படுவதற்கான வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – ஜனாதிபதி மைத்திரிபால ஏற்படுத்தினால் அவரை விட்டுப் பிரிந்து ஐ.தே.கவுடன் சேர்ந்து செயற்பட அவர்கள் விரும்புகின்றனர்.

அப்படி வரக் கூடிய ஒரு டசின் எம்.பிகளை அரவணைத்தால், தான் தனித்து ஐ.தே. முன்னணி அரசை அமைப்பதற்கு போதிய எண்ணிக்கை எம்.பிக்கள் கிடைத்து விடும் என்று ரணில் நம்புகின்றார். ஆனால் அதற்கும் இடம் கொடுக்கின்றார் இல்லை ஜனாதிபதி மைத்திரிபால.

சு.க. தரப்பிலிருந்து யாரையாவது பிரித்து எடுத்து ஐ.தே.க. தனி அரசு அமைக்க முயன்றால், அப்படிப் பிரிந்து செல்லும் சு.கவினருக்கு அமைச்சர் பதவி வழங்க இடமளிக்க மாட் டேன் என்று நேரடியாகப் பிர தமர் ரணிலுக்கு முகத்துக்கு நேரே கூறி ரணிலின் அந்த முயற்சிக்கு 'செக் – மேட்' வைத்திருக்கின்றார் மைத்திரி.

பாவம் ரணில். தான் விட்டுக் கொடுத்து, இடமளித்து, தன் மூலம் ஜனாதிபதியாக்கப்பட்டவர் தனக்கு வைக்கும் ஆப்பை பார்த்து, பொறுத்திருக்கின்றமையைத் தவிர, அவருக்கு வேறு வழியில்லை...!

- மின்னல் -

# கூட்டமைப்பு ஈ.பி.டி.பியுடன் ஒருபோதும் கூட்டு வைக்காது

## கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 15

"உள்ளூராட்சிச் சபைகளில் ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் எண்ணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒருபோதுமே இல்லை. அப்படி எந்தவொரு இணக்கப்பாட்டுக்கும் நாங்கள் வரமாட்டோம்".

இவ்வாறு நேற்றுத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

பெரும்பான்மை பெறாத சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப்பதற்கு முயற்சிப்பதாக வெளியான செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈ.பி.டி.பிக்கும் கூட்டமைப்புக்கும் எட்டாப் பொருத்தம். டக்ளஸுடன் இணைந்து ஆட்சி அமைப்பது என்ற கதைக்கே இடமில்லை. அவர்களுடைய கொள்கை வேறு. கூட்டமைப்பின் கொள்கை வேறு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை வலுவாக ஆதரிக்கும் ஒரு கட்சி. அந்தக் கட்சி ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒருபோதுமே வாய்ப்பில்லை. அவ்வாறு வெளியான செய்திகள் உண்மையில்லை. – என்றார். (ஐ)

# தேர்தல் வெற்றியாளர்களை இன்று சந்திக்கிறார் மைத்திரி

கொழும்பு, பெப்.15

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் கீழுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# இரண்டு குழுக்கள் மோதல்; ஒருவர் வைத்தியசாலையில்

வவுனியா இலுப்பையடியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் வெட்டுக்காயங்களுக்குள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த குழுவினருக்கும் இலுப்பையடியில் உள்ள குழுவினருக்கும் இடம்பெற்ற கைகலப்பிலேயே சிகையலங்கார நிலைய உரிமையாளர் ஒருவரின் மகன் காயத்துக்குள்ளாகி வவுனியா பொது வைத்தியாசலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ–100)

### பிரதமராவதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னையை அவர்கள் இருவரும் நிராகரித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசில் அங்கம் வகிக்க முடியாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறி வருகின்றனர்.

இதனால், பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலகி, சபாநாயகர் கரு ஜயசூரியவை அல்லது வேறொரு மூத்த தலைவரை பிரதமராக நியமிக்கலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை கூறியிருந்தார்.

பிரதமர் பதவிக்கு சஜித் பிரேமதாசவின் பெயரும் முன்மொழியப்பட்டது. எனினும், கரு ஜயசூரியவும், சஜித் பிரேம தாசவும், பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கவின் முழுமையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று அவர்கள் கூறிவிட்டனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. (ஐ)

### கட்டடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளனர் எனவும், இருவர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

தேயிலையைக் களஞ்யப்படுத்திவைக்கும் கட்டடமொன்றின் பின்பகுதியிலிருந்து கட்டடமொன்று சரிந்து குறித்த கட்டடத்தின் மேல் விழுந்துள்ளதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கட்டட இடிபாடுகளில் சிக்கி 4 பெண்கள், 3 ஆண்கள் உயிரிழந்துள்ளதோடு இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிராண்ட்பாஸ், பபாபுள்ளே மாவத்தையில் சுலைமான் வைத்தியசாலைக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டட இடிபாடுகளில் சிக்கிப் படுகாயமடைந்துள்ள இருவரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளது எனக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# தோல்விக்குப் பொறுப்பேற்று முதலில் விலகி இடம் விடுங்கள்!

தோல்வியிலும் - பின்னடைவிலும் - பாடம் படிக்காதவன், பட்டறிவைப் பயன்படுத்தத் தெரியாதவன், முன்னேறப் போவதில்லை.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ் மக்களின் பிரதிபலிக்கப்பட்ட மனப்போக்கை தமிழ்க் கூட்டமைப்பு உணரவில்லையோ, உணரத் தலைப்படவில்லையோ என்பது புரியவில்லை.

மக்கள் அளித்த தீர்ப்பு தெளிவானது. முன்னைய தேர்தல்களில் ஏறத்தாழ ஏகமனதாகக் கூட்டமைப்புக்கு பின்னால் நின்ற மக்கள் இன்று அதிலிருந்து கலைந்து போகத் தலைப்பட்டு விட்டார்கள்.

வடக்கு, கிழக்கில் இத்தனை தமிழ் எம்.பிக்களில் இத்தனை பேர் நாங்கள் என்று இதுவரை காலமும் பீற்றியடித்த கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இனி வாக்கு விகிதாசாரம் பற்றிக் கூடப் பேச முடியாது. வடக்கில் மூன்றில் ஒரு பங்கு வீதத்துக்கு வாக்கு வங்கி சரிந்து விட்டது. ஏகப் பிரதிநிதித்துவம் பறந்து விட்டது. ஏறத்தாழ எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் தனித்து ஆகக் கூடிய உறுப்பினர்களை பெற்றுள்ளோம் என்று கூறுவது கூட்டமைப்புக்கு வெற்றியல்ல பெரும் தோல்வியே.

கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயாவிலிருந்து எவருமே இந்தப் பின்னடைவு குறித்து அலட்டிக் கொண்டவர்களாகத் தெரியவில்லை. இந்தத் தேர்தல் முடிவுகளை வெற்றி என்பது போலக்காட்டும் அவர்களின் கருத்து வெளிப்பாடும், செயல்போக்கும் பட்டறிவு பட்டுத் தெளிந்தவர்களாகத் தோற்றவில்லை.

யாழ். மாநகர முதல்வர் இ.ஆலோல்ட்தான் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவு தூரம் இது யாழ். மாநகர சபையின் செயற்பாட்டுக்கு சாதகமானது, சாத்தியமானது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

38 பேர் கொண்ட வடக்கு மாகாண சபையை முப்பது பேரோடு முதல்வர் விக்னேஸ்வரனிடம் கையளித்தவர்கள் வடக்கு மக்கள். அத்தகைய பெரும்பான்மையோடு நிர்வாகத்துக்கு வந்த நீதியரசரை அமைதியாக சபையை நடத்த விடாமல் - 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில் தள்ளாடும் நிலைக்கு - தள்ளிய பிரகிருதிகளில் பிரதானமானவர் ஆனோல்ட். அவர் இன்று 45 பேர் கொண்ட மாநகரசபையை, ஆக 17 பேரின் பின்னணியுடன் (அதில் கூட எத்தனை பேர், ஆனோல்ட் மாகாண சபையில் செய்தமை போல 'ஸேம் சைட்' கோல் அடிக்கக் கூடியவர்களோ தெரியவில்லை) பொறுப்பேற்கப் போகின்றார், எப்படி சபை செயற்படப் போகின்றது என்பதற்குக் காலம் பதில் கூறும்.

இந்தத் தேர்தல் ஒரு புறம் தமிழ்க் கூட்டமைப்புக்கு பேரிடியாக - பேரடியாக - வந்து விழுந்த அதேசமயம், மாற்றுக் கட்சிகளுக்கு பெரும் ஊக்க சக்தியாகவும் அமைந்திருப்பது கண்கூடு.

கூட்டமைப்புத் தலைவர்கள் சிலரின் ஆணவப் போக்கான - திமிர்த்தனமான - செருக்கு மிக்க அரசியல் செயற்பாடுகளும், கருத்து வெளிப்பாடுகளுமே இந்த மோசமான நிலைமை உருவானமைக்கான காரணங்களில் பிரதானமானவை என்பதை சாதாரண மக்களே உய்த்துணர்ந்து பேசும்போது, அது தெரியாதவர்கள் போல கூட்டமைப்புத் தலைவர்கள் இன்னும் செயற்படுகின்றமைதான் ஆச்சரியமானது.

'சத்தமில்லாத பெரும்பான்மை' (Silent Majority) தங்களுடன் என்று மார்தட்டியவர்கள் இன்று சத்தம் சந்தடியில்லாமல் மக்கள் வழங்கிய தீர்ப்பை இன்னும் புரிந்து கொள்ளாமல் நடப்பது - அல்லது அப்படிப் புரிந்து கொள்ளாமல் நடிப்பது - ஆச்சரியத்திற்குரியதுதான்.

பெரும் பின்னடைவு நிலைக்கு - தோல்விக்கு - கூட்டமைப்பு தள்ளப்பட்டிருக்கின்றது என்பதே இத்தேர்தல் முடிவுகள் தரும் பாடம். மாற்றுச் சக்திகளை மக்கள் நாடத் தலைப்பட்டு விட்டார்கள் என்பதற்கான தெளிவான காட்டி இந்தத் தேர்தல் பெறுகள்.

இந்தப் பின்னடைவு நிலையிலிருந்து கூட்டமைப்பை மீட்பதாயின் அது பின்னடைவு நிலை என்பதை முதலில் ஒப்புக் கொண்டு, அதனை ஏற்க வேண்டும்.

வடக்கில் தமிழரசுக் கட்சியை - கூட்டமைப்பை - இந்த நிலைமைக்கு மோசமாக வழி நடத்திச் சென்றவர்கள் - சென்று கொண்டிருப்பவர்கள் - முதலில் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். கட்சியை இந்த மோசமான நிலைக்குக் கொண்டு சென்றவர்கள் முதலில் அதற்காகப் பொறுப்புகளை தார்மீக ரீதியில் தன்னும் ஏற்றுக் கொண்டு கட்சிப் பொறுப்பிலிருந்து நீங்கி, அதனை அறிவிக்க வேண்டும்.

தமிழர்கள் மத்தியில் மற்றொரு பெரும் சக்தியாக உருவெடுத்திருக்கும் முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரனைக் கூட்டமைப்பிலிருந்து தள்ளி வைப்பதற்கு இனியும் முயற்சிப்பது, கூட்டமைப்பைப் பொறுத்தவரை - தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை - தற்கொலைக்கு ஒப்பான வேலையாகும். அது, இன்று கொல்லும் தற்கொலையாக இல்லாவிடினும், நின்று கொல்லும் தற்கொலையாகி விடும் என்பதைக் கூட்டமைப்புத் தலைமை உணர வேண்டும்.

அவரையும் கூட்டமைப்புத் தலைமைக்குள் முறையாக உள்வாங்கி, கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்கு சேத நிவிர்த்தி (Damage Clearings) செய்வதாயின் அதன் தலைவர் சம்பந்தன், அதன் விடயங்களில் சிலரைத் தள்ளிவைக்கவும் முன்வரவேண்டும்.

கூட்டமைப்பின் - தமிழரின் - பின்னடைவை அல்லது தோல்வியை ஒப்புக்கொள்ளுதல், அதற்கு காரணமானவர்கள் அதற்குப் பொறுப்பேற்று கட்சிப் பொறுப்பிலிருந்து தாமாக விலகுதல், நீதியரசர் விக்னேஸ்வரனை, அருந்தவபாலன் போன்றோரை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வருவதற்கு இதய சுத்தியுடன் விரைந்து நடவடிக்கை எடுத்தல் - இந்த மூன்றையும் செய்யத் தவறினால் -

தலைவர் பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட பெருமையுடையது எனத் தாங்கள் புகழ்ந்துரைக்கும் தமிழ்க் கூட்டமைபையும் -

தந்தை செல்வாவினால் ஸ்தாபிக்கப்பட்டது எனத் தாம் பீற்றிக் கொள்ளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் -

நிரந்தரமாகப் பின்னடைவுக்குள் தள்ளிய பணியை உறுதிப் படுத்தியவர்கள் ஆவீர்கள்!

# திருக்கேதீஸ்வரத்திலிருந்து வவுனியா வந்த வான் விபத்து!






## 7 பேர் காயம்

வவுனியா, பெப். 15

திருக்கேதீஸ்வரத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற வான் பேருந்து ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் 12 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச் சென்றுவிட்டு வவுனியா நோக்கி திரும்பி வந்துகொண்டிருந்த கொழும்பைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர் ஆறுபேர் பயணித்த ஹயஸ் ரகவான் வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு அருகில் பயணித்த போது வவுனியாவிலிருந்து கற்பகபுரம் பகுதிக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற நிலையில் பய ணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடன் மோதி விபத்துக் குள்ளானது.

இதில் வானில் பயணம் மேற்கொண்ட ஒரே குடும்பத் தைச் சேர்ந்த ஆறுபேரில் கணவனான கேதீஸ்வரன் (40 வயது), மனைவி யாழினி (36 வயது) , மகள் ஒருவர் (7 வயது) , கணவனின் தாயார் விஜயலட்சுமி (60 வயது) ஆகிய நான்குபேர் காயமடைந்துள்ளனர்.

பேருந்தில் பயணித்த மூவர் சிறுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வானில் பயணித்தவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் மூவர் கடுமையான காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளப் பொலிசாரும் வவுனியா பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.

100

# உடைக்கப்படும் வணக்க சிலைகள்; மன்னார் இந்து மக்கள் கண்டனம்!

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இந்து மக்களின் வணக்க சிலைகள் உடைக்கப்பட்டு வரும் சம்பவத்திற்கு மன்னார் மாவட்ட இந்து மக்கள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நேற்றுக் காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரொன்றையும் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

சிவராத்திரி தினத்தில் மிலேச்சத்தனமாக ஆலய விக்கிரகங்களை உடைத்தும், களவாடிச் சென்றும் இந்து மக்களின் உணர்வை கொச்சைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நாசகார செயலை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறான செயற்பாடுகளை உடன் நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் மத ஒற்றுமையைக் கெடுக்கும் வகையில் இடம்பெறுகின்ற இந்தச் சம்பவங்களுக்கு பொலிஸாரும், உரிய அதிகாரிகளும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.



# கொக்கட்டிச்சோலையிலும் சிவராத்திரி



சிவராத்திரியை முன்னிட்டு கிழக்கிலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு பூஜைகள் இடம்பெற்றுள்ளன.

நேற்றி முன்தினம் இரவு முழுவதும் சிவனை நோக்கி விரதமிருக்கும் அடியார்கள் பலரும் பூஜைகளிலும் கலை நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தனர்.



# கிளிநொச்சியில் வறிய மாணவர்களுக்கு இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள்!



கிளிநொச்சி, பெப். 15

கிளிநொச்சி பாதுகாப்புப் படை தலைமையகத்தின் 57 ஆவது படைப்பிரிவினர் மேற்கொண்ட முயற்சியின் பலனாக அப்பிரதேசத்தை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட வறிய மாணவர்கள் சிலருக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

விசுவமடு மத்திய கல்லூரியில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் 150 பிள்ளைகள் பயன்பெற்றுக் கொண்டதாகவும், இதற்கான நன்கொடையியை கிரிஷ்ணசாமி கனகராஜா மற்றும் துஷ்யந்த ஆகியோர் வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது, பாடசாலை மாணவர்களின் நலன் கருதி சுத்தமான குடிநீரை வழங்கும் வகையில் நிறுவப்பட்ட சுத்திகரிப்பு நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான நிதி அனுசரணையினை வீ .மனோகர், வைத்தியர் சிவா கோணேஷன் மற்றும் கே.ரத்யா ஆகியோர் வழங்கியுள்ளனர்.

(க)

## நாளை

16.02.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் மு.ப. 10.13 வரை
திதி : பிரதமை பி.இ. 04.12 வரை
சுபநேரம்: 06.33 – 08.03 வரை
இராகுகாலம்: 11.03 – 12.33 வரை

# ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்தால் தேசிய அரசின் ஆதரவு வாபஸ்

**நிமால் சிறிபால டி சில்வா அறிவிப்பு**

கொழும்பு, பெப். 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பிரதமராக பதவி வகித்தால், தேசிய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்வோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்றில் சுயாதீனமான அணியாக செயற்படவும் தீர்மானித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, தேசிய அரசின் பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றை தோற்கடித்து பெரும் வெற்றியைப் பதிவு செய்துள்ளது

இந்தத் தோல்விக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்று குற்றஞ்சாட்டிவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விலக வேண்டும் அல்லது விலக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

தமது இந்த நிலைப்பாட்டை கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமும் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றோம் எனக் கூறியுள்ள சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பிரதமர் பதவியில் ரணில் நீடித்தால் தேசிய அரசில் இருந்து தாம் வெளியேறப் போகிறோம் என்றும் அறிவித்துள்ளார்.

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 41 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 35 பேர் எந்தவொரு நிலையிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைவதில்லை என்ற உறுதியான நிலைப் பாட்டில் இருக்கின்றோம் என நிமால் சிறிபால தெரிவித்துள்ளார்.

இதே நிலைப்பாட்டிலேயே கட்சியின் மூத்த தலைவர்களான சுசில் பிறேமஜயந்த் அநுர பிரியதர்சன யாப்பா, தயாசிறி ஜயசேகர டிலான் பெரேரா லக்ஷ்மன் யாபா அபேவர்தன ஆகியோரும் இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இது குறித்து ஜனாதிபதிக்கும் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம் என்றும் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது அதன் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனோ தங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் எந்தவொரு கோபதாபங்களும் இல்லை.

எனினும், உள்ளூராட்சிசபைத் தேர்தலில் மக்கள் அளித்த ஆணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்று பதவியை விட்டு வெளியேற வேண்டும் என்ற அரசியல் நிலைப்பாட்டையே நாம் வலியுறுத்துகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிகாரிகள் பற்றாக்குறை; வழக்குகள் தாமதம்!

கொழும்பு, பெப். 15

அதிகாரிகள் இன்மையால் வழக்கு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுவதாக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தில் சந்தேகத்திற்குரிய விசாரணைகளை மேற்கொள்கின்ற பிரிவு, DNA பிரிவு மற்றும் குற்றப் பிரிவு அதிகாரிகள் பற்றாக்குறை நிலவுகின்றது என அந்த திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரசாயன மற்றும் இயற்பியல் விஞ்ஞான பிரிவில் விஞ்ஞானத் துறையில் விசேட அல்லது கௌரவ பட்டம் பெற்றிருப்பது இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தில் இணைந்து கொள்வதற்கான குறைந்த பட்ச தகைமையாகும்.

இதுவே திணைக்களத்தில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுவதற்கு காரணமாக அமைந்துள்ள தென்று அந்த திணைக்களத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ!




கொழும்பு, பெப். 15

பொகவந்தலா வலெச்சுமி தோட்டம் கீழ் பிரிவில் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் காயங்களுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் கீழ் பிரிவு தோட்டப் பகுதியில் 50அடி பள்ளத்தில் ஓட்டோ ஒன்று குடை சாய்த்ததில் மூன்று பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது இந்த ஓட்டோ பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் மேற்பிரிவு தோட்டத்தில் இருந்து நோர்வூட் வெஞ்சர் பிரதேசத்தை நோக்கிப் பயணித்த போது அதிவேகத்தின் காரணமாக பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் கீழ் பிரிவு பகுதியில் விபத்துக் குள்ளாகியுள்ளது.

இதில் பயணித்த மூன்று பேர் காயங்களுக்கு உள்ளாகி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என நோர் வூட் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

## ஹெரோயின் விற்றார்கள் என யாழ்ப்பாணத்தில் 2 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப்.15

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளிப்பகுதியில் வைத்து அவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து பத்து கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 78 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப் பட்டது.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் மாதகல் பகுதிகளைச் சேர்ந்த 32 மற்றும் 38 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பகையை நாம் அன்பால் வெல்வோம்



**தவக்கால சிந்தனை**

''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்நலம் துறந்து தம்சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். என் பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார். ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாராகில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?'' என நற்செய்தி யாகத் தரப்பட்ட ஒவ்வொரு வரிகளும் எமது வாழ்வை மீட்டுப் பார்க்க இத்தவக்காலம் ஒரு சந்தர்ப்பமாகின்றது.

முன்னிருக்கைக்கு முண்டி அடிக்கும் பேராசை மனித பலவீனமே போட்டி, பொறாமை, வஞ்சக எண்ணங்களாக மனித பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. தன்நலம் பிறர் நலத்துக்கு தீங்கில்லாது எமது வார்த்தைகள் வாழ்வின் வெளிப்பாடாக எமது செயல்களை வெளிப்படுத்தும் மனமாற்றம் சிறுசிறு விடயங்களில் புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்புகளால் வெளிப்படையானவையாக அமைய தவக்காலம் எம்மை புனிதப்படுத்த கிடைத்த சந்தர்ப்பங்களாகும்.

சவால்களைச் சந்திக்கும்போது எல்லாம் மேற்கூறிய வார்த்தைகள் எமது வாழ்வை புடமிட்டு எதிரிக்கும் அன்பால் வெல்லும் பண்புகளை வெளிப்படுத்த எம்மை தயாராக்கும் மனமாற்றத்துக்காக எமது வழிபாட்டை வாழ் விக்க அழைக்கிறது இத்தவக்காலம் எமது கோபம், வெறுப்பு, பய உணர்வுகள், வக்கிர வார்த்தைகளால் ஏற்படும் பகை உணர்வுகளுக்கு விடையளிப்பதற்கு அன்பு பரிமாற்றத்துக்கான மனமாற்றத்தை பிறர் மகிழ்வுக்காக அர்ப்பணத்தோடு செயற்பட மனதை பக்குவப்படுத்தி தவப்பயணத்தை அர்த்தமுள்ளதாக்கி இறையாண்மை வெளிப்படுத்துவோம்.

## ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி பூஜை!

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய சிவராத்திரி பூஜை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சிவனுக்குரிய விரதங்களில் ஒன்றான சிவராத்திரி விரதம் நேற்றுமுன்தினம் உலகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சிவனுக்குரிய விரதங்களில் ஒன்றான சிவராத்திரி விரத விசேட பூசை வழிபாடு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் சிறப்புற இடம் பெற்றது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய பிரதம குரு தலைமையிலான சிவாச்சாரியர்களால் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

மேலும், இலங்கையில் உள்ள அனைத்து சிவன் ஆலயங்களிலும் நேற்றுமுன்தினம் இந்த சிவராத்திரி நிகழ்வு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

அது மட்டுமன்றி முல்லைத்தீவு தான்தோன்றி ஈஸ்வர ஆலயத்தில் ஏராளமான பக்தர்கள் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# நல்லாட்சி அரசாங்கம் பதவி விலக வேண்டும்

மட்டக்களப்பு,பெப்.15

நல்லாட்சி அரசாங்கம் உடனடியாகப் பதவிவிலகி மக்களின் ஆணையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனகட்சி உள்ளூராட்சி மன்றங்களின் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியதைப் பாராட்டி நேற்றுமுன்தினம் கிரானில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் இளைஞர் அணியினரினால் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி பாராட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்சியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



கருணாவும் கூறுகிறார்

முன்னாள் ஜனாதிபதியின் கட்சியானது அதிகளவு உள்ளூராட்சி மன்றங்களைக்கைப்பற்றிப் பெரும் வெற்றி பெறும் என்று கடந்த ஒரு மாதத்துக்கு முன்பே ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்திருந்தேன். அது இன்று நடந்துள்ளது.

இன்று ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறானதொரு தேர்தல் பின்னடைவு முடிவுகள் பெற்றிருந்தால் அதிகாலையிலேயே பதவி விலகியிருப்பார்கள்.

பிரதேச மக்கள் சரியான தீர்ப்பு வழங்கியுள்ளனர். எனது கட்சியான தமிழர் ஐக்கிய முன்னணியானது மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

இது எனக்குக் கிடைத்த வெற்றியாகும்.எனது கட்சி ஆரம்பித்து ஒரு வருட காலமாகும். இது எனது கட்சி எதிர் நோக்கிய கன்னித் தேர்தலாகும். அதை மக்கள் அங்கீகரித்துள்ளனர். அதையிட்டு பெருமைப்படுகின்றேன்.

எதிர்காலத்தில் சிறந்ததொரு அரசியல் காய் நகர்வை நகர்த்துவதற்கு திட்டமிட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

## இருளில் மூழ்கியுள்ள வீதிகள் திருட்டு அச்சத்தில் மக்கள்

திருகோணமலை – கந்தளாய், பேராறு மேற்கு கிராம முன்னேற்றப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீதிகள் வெளிச்சமின்றி இருளில் மூழ்கிக் காணப்படுவதால் திருடர்களால் அச்சம் ஏற்பட்டுள்ளது என அப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பேராறு மேற்குப் பகுதி மின் கம்பங்களில் இரவு நேரங்களில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் வெளிச்சமின்றி இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் கோழிகள் மற்றும் ஆடுகள், வீடுகளின் பொருத்தப்பட்டிருக்கும் நீர் இறைக்கும் மோட்டர் இயந்திரங்கள் திருடப்படுகின்றன.

இது பற்றி கந்தளாய் பிரதேசசபையின் செயலாளர் மற்றும் பேராறு மேற்கு கிராம முன்னேற்ற சங்கத்தின் தலைவரிடமும் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை தவிசாளர் பதவி தமிழனுக்கே!




ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை தவிசாளர் பதவி தமிழனுக்கே என இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் என். விஷ்ணு காந்தன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு கொம்மாதுறை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் கட்சிகளுடன் இணைந்தே ஆட்சி அமைக்கும். தவிசாளர் பதவி தமிழனுக்கே வழங்கப்படும்.பங்காளிக் கட்சிக்கு உபதவிசாளர் பதவி வழங்கப்படும். இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்புடன் பேசத் தயார்!

## சுயேச்சைக்குழுவின் தலைவர் நந்தகுமார்



(காரைதீவு நிருபர் சகா)

நடந்துமுடிந்த காரைதீவு பிரதேச சபைத்தேர்தல் பெறுபேற்றினடிப்படையில் கூடிய 4 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த நாம் தயாரென சுயேச்சைக் குழுத் தலைவர் சந்திரசேகரம் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

காரைதீவு பிரதேசபைக்கான தேர்தலில் த.அ.கட்சி 4 ஆசனங்களையும் சுயேச்சைக்குழு-1 அணி 2 ஆசனங்களையும் ஸ்ரீல.மு.கா. 2 ஆசனங்களையும் ஸ்ரீல.சு.கட்சி 2ஆசனங்களையும் அ.இ.ம.காங்கிரஸ் 1ஆசனத்தையும் சுயேச்சை 2 அணி 1ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

இங்கு ஆட்சியமைப்பதானால் 7ஆசனங்கள் தேவை. அங்கு அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களை யாரும் பெறவில்லை. எனவே கூட்டாட்சிக்கான பேச்சு நேரமிது.

இந்த நிலையில் மக்களுக்கு ஏலவே அளித்த வாக்குறுதியினடிப்படையில் தேர்தல் முடிந்தபிற்பாடு காரைதீவு மகாசபை இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மகாசபையின் வழிநடத்தல் குழு சபைச்செயலாளரின் இல்லத்தில் கூடியது.

வழிநடத்தல்குழுவின் முன்னிலையில் சுயேச்சை அணித்தலைவர் ச.நந்தகுமர் உள்ளிட்ட வேட்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்டமுடிவுகள் தீர்மானங்கள் பற்றி தலைவர் ச.நந்தகுமார் ஊடகத்திற்கு கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் தேர்தலுக்கு முன்பு மகாசபை கூட்டியகூட்டத்தில் எமது காரைதீவு தமிழ்மக்களின் இருப்பு, மானம் காப்பாற்றும் வகையில் செயற்படுவதென்றும் எமக்குக் கிடைக்கின்ற ஆசனங்களை எம்மிடையே சுழற்சிமுறையில் அனைவரும் பகிர்ந்து சபையை அலங்கரிப்பது என்றும் தீர்மானமெடுத்திருந்தோம்.

அன்று வழங்கிய வாக்குறுதிப்படி காரைதீவில் தமிழ்மக்களின் இருப்பைப் பாதுகாக்க தற்சமயம் அதிகூடிய 4 ஆசனங்களைப் பெற்ற த.தே.கூட்டமைப்புடன் பேசத்தயார் என்று தெரிவித்துள்ளார்.



## முகாமைத்துவ உதவியாளர்களாக 6,000 பேருக்கு விரைவில் நியமனம்

### நேர்முகப்பரீட்சை இந்த வாரம்

கொழும்பு, பெப்.15

அரச முகாமைத்துவ உதவியாளர்கள் 6 ஆயிரம் பேர் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்று நிர்வாக மற்றும் அரச முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

அரச முகாமைத்துவ உதவியாளர் பகிரங்கப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தன.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இருந்து 6 ஆயிரம் பேர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இந்த வாரம் ஆரம்பமாகி மாத இறுதிக்குள் நிறைவு பெறும் என்று இணைந்த சேவைகள் பணிப்பாளர்நாயகம் திருமதி ஏ.வி.கமகே தெரிவித்தார்.

(ஐ)

## தமிழில் தேசிய கீதம் பாடியதால்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தோல்வியாம்

### திலக் மாரப்பன கூறுகிறார்



கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கவுக்குப் பின்னடைவு ஏற்பட்டமைக்கு சுதந்திர நாளன்று தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதே முக்கிய காரணம் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பிரதமர் சிங்க தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஐ.தே.கவின் உயர்மட்டக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழில் தேசிய கீதம் பாடப்பட்ட ஒவ்வொரு முறையும், ஐ.தே.க., 50 ஆயிரம் சிங்கள பௌத்த வாக்குகளை இழந்துள்ளது என்றும் திலக் மாரப்பன கூறியுள்ளார்.

அவரது இந்தக் கருத்தை நிதி அமைச்சர் மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் சஜித் பிரேமதாச, சமுர்த்தி அமைச்சு ஐ.தே.கவிடம் இல்லாததால், மக்களுடன் அதிகளவில் நெருக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என்றும், எனவே அந்த அமைச்சைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாயிகளுக்கு உரிய வேளையில் இரசாயனப் பசளை கிடைக்காமையும் கிராமங்களில் ஐ.தே.கவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என அமைச்சர் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிங்கள பௌத்த வாக்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கை அரசின் புதிய சட்டத்தை எதிர்த்து இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்

தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கையில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டத்தை இரத்து செய்யக் கோரி, இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முதல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடிக்கும் மீனவர் படகுக்கு 17.50 கோடி ரூபா அபராதம் விதிக்கும் புதிய சட்டத்தை இலங்கை அரசு நாடாளுமன்றில் தாக்கல் செய்துள்ளது.

இந்தச் சட்டத்தை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என மத்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும் என தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இராமேஸ்வரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மீனவர் சங்கக் கூட்டத்தில், இலங்கை சிறையில் உள்ள 136 மீனவர்களையும் 186 படகுகளையும் விடுவிக்க வேண்டும், டீசல் விலையைக் குறைக்க வேண்டும்.

தமிழக மீனவர்களை அழிக்கும் நோக்கில் இலங்கை அரசு கொண்டு வந்துள்ள புதிய சட்டத்தை இரத்து செய்ய மத்திய அரசு இலங்கையை வலியுறுத்தவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனை வலியுறுத்தி நாகை, இராமநாதபுரம் உள்ளிட்ட 6 மாவட்ட மீனவர்கள் நடத்தும் பாம்பன் தேசிய நெடுஞ்சாலைபாலம் முற்றுகையிடும் போராட்டத்தில் பங்கேற்பது, இப் போராட்டத்திற்கு ஆதரவாக நேற்று முதல் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது, இலங்கை வசமுள்ள 186 படகுகளின் உரிமையாளர்களுக்கு அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கைதிகளின் மனிதாபிமானம்

தண்டனைவிதிக்கப்பட்ட குற்றவாளிகள் இணைந்து அப்பாவிக் குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்றை வழங்கியுள்ளனர்.

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள், தமக்கான உணவு வேளையில் வழங்கப்படும் இறைச்சியைத் தவிர்த்து அந்தப் பணத்தைக் கொண்டு இந்த வீட்டை நிர்மாணித்துள்ளனர்.

வடக்கு களுத்துறை ரயில் நிலைய வீதியில் வதியும் மானெல் சந்திரிக்கா மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளுக்கு சிறைச்சாலைத் திணைக்களத்தின் ஊடாக வீடொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மானெல் சந்திரிக்காவின் கணவர் புற்று நோயினால் இறந்து விட்டார் என்றும் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க மிகவும் சிரமப்படுகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீட்டை நிர்மாணிக்கும் அனைத்துப் பணிகளையும் கைதிகளே மேற்கொண்டுள்ளனர்.

இந்த வீட்டு நிர்மாணப் பணியில் இணைந்து கொண்ட ஒரு கைதி தப்பிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படாத குடும்பம் ஒன்றுக்காக முதல் தடவையாக கைதிகளின் முயற்சியினால் வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

## பிரதியமைச்சர் தெவரப்பெரும வைத்தியசாலையில் அனுமதி



கொழும்பு, பெப்.15

கடந்த 5 நாள்களாக புளத்சிங்கள நகரில் உண்ணாவிரதம் இருந்து வந்த பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும நேற்றுமுன்தினம் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார்.

அவரது உடல் நலம் மோசமடைந்துள்ளதால் அவர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை மற்றும் ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் புளத்சிங்கள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும், அது தொடர்பில் பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்தாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 5 நாள்களாகப் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும புளத் சிங்கள நகரில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அர்ஜூன் மகேந்திரனுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இன்றுடன் முடிகின்றது

கொழும்பு, பெப். 15

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனுக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாக வழங்கப்பட்ட கால அவகாசம் இன்றுடன் முடிவடைகின்றது.

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விநியோக மோசடி தொடர்பில் அர்ஜூன் மகேந்திரன் சந்தேகத்திற்குரியவராக பெயரிடப்பட்டுள்ளார்.

இதையடுத்து, அவரைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு, கொழும்பு கோட்டை நீதிமன்றம் கடந்த 5 ஆம் திகதி அழைப்பாணை பிறப்பித்திருந்தது.

இதற்கமைய, சிங்கப்பூரில் உள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு 10 நாள்கள் கால அவகாசம் வழங் கப்பட்டிருந்தது.

இந்தக் கால அவகாசம் இன்றுடன் முடிவுக்கு வருகிறது. எனினும் அவர் இலங்கைக்குத் திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊழல், மோசடிக்கு எதிரான நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, பெப்.15

லஞ்சம், ஊழல், மோசடி மற்றும் வீண் விரயங்களுக்கெதிரான விரிவான மக்கள் நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் வழங்கிய உறுதிமொழிக்கேற்ப, அனைத்து மக்களினதும் கருத்துக்கள், முன் மொழிவுகள் மற்றும் செயற்திறனான பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சுபீட்சமான புதியதோர் யுகத்தை நோக்கி நாட்டைக் கொண்டுசெல்லும் வகையில் ஊழல், மோசடி, லஞ்சம் மற்றும் வீண் விரயங்களுக்கெதிரான விரிவான அரசியல் மற்றும் சமூகக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல், ஆட்சிமுறைமையை வலுப்படுத்தல், சட்ட முறைமையையும், சட்ட நிறுவனங்களையும் முறைப்படுத்துதல் ஆகியன மேற்கொள்ளப்படும்.

ஊழல், மோசடி, லஞ்சம் மற்றும் வீண்விரயங்களை நாட்டிலிருந்து ஒழித்து நாட்டை சுபீட்சமானதொரு தேசமாக கட்டியெழுப்பும் மக்கள் அரணின் ஒரு தூணாக இந்தத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக தமது பெறுமதியான கருத்துக்கள், முன்மொழிவுகளை 2018 மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 'ஊழலுக்கெதிரான தேசிய நிகழ்ச்சித் திட்டம்', ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு – 1 என்ற முகவரிக்கு அல்லது 011 2431502 என்ற தொலைநகலின் ஊடாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஐ)

# நடேஸ்வராவின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ். நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் கு. விமலன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. இந்திரகுமார், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா. ஆனந்தகுமார், கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை பிரதி அதிபர் செ. மகிந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# தினசரி ராசி பலன் (15.02.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசிதிங்கள் 3 ஆம் நாள் வியாழக்கிழமை அமாவாசைத்திதி பி.இ. 2.35 மணி வரை பின்னர் பிரதமை. நட்சத்திரம் திருவோணம் காலை 7.31 மணி வரை பின்னர் அவிட்டம். சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 1.53 மணி முதல் 3.21 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 7.59 மணி முதல் 9.29 மணி வரை இன்று அமாவாசை விரதம்*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத அமாவாசை*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அவிட்டம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். உடல் நலம் சீரடையும். உத்தியோகத்தர்கள் சுறுசுறுப்புடன் பணியாற்றி அதிகாரிகளிடம் வேண்டியவற்றைப் பெறுவார்கள்.

**ரிஷபம்** அதிஷ்டமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு நன்றாக அமையும். வேலை பார்க்குமிடத்தில் மதிப்பு, மரியாதை உயரும். அரச பணியாளர்கள் நினைத்தபடி வருமானம் உயரும்.

**மிதுனம்** யோசனையான நாள். பணம்பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். வியாபாரம் மந்தமாக நடக்கும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தொழிலில் விழிப்புடன் செயற்பட வேண்டும். சொத்துக்கள் விஷயத்தால் அலைச்சல், செலவு இழுபறி ஏற்படும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். உடல்நலம் நன்கு அமைவதால் எதிலும் துணிவுடன், வேகமுடன் செயற்பட்டு வெற்றி காரிய அனுகூலம் பெறுவார்கள்.

**கன்னி** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப வாழ்வில் இதமான சூழ்நிலை இருக்கும். உறவினர்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**துலாம்** துயரமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். செலவினங்கள் அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகும். வீட்டைத்திருத்தி அமைக்கும் செலவுகள் உண்டாகும்.

**விருச்சிகம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். இருப்பிடத்தில் அதிருப்தியும், செலவும் கூடுதலாக இருக்கும். சகோதரவழி உதவிகள் குறையும்.

**தனுசு** இன்பமான நாள். பணப்புழக்கம் மனத்திருப்தியைத் தரும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். உறவினர்களால் நன்மைகள் உண்டாகும். பொன், பொருள் சேர்த்து தன்னிறவு அடைவார்கள்.

**மகரம்** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். இடவசதி நன்கு அமையும். அரசாங்கச் சலுகைகள் சகஜமாகக் கூடிவரும். சகோதர உறவு வலுவடையும்.

**கும்பம்** துன்பமான நாள். பணவசதி குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் உண்டாகும். வியாபாரத்தில் நம்பியவர்கள் கூட ஏமாற்றுவார்கள். தொழிலில் வேகம் விறுவிறுப்புத் தன்மை இருக்கும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். உடல்நலம் நல்ல தெளிவுடன் காணப்படும் நினைத்த காரியம் வெற்றி பெறும். தூரதேசத்திலிருந்து நல்ல தகவல் வரும்.

**சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதங்கள் திருவாதிரை 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகாரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# சிவன் ஆலயத்தில் பௌத்த துறவிகள்!





கொழும்பு, பெப். 15

வரலாற்று சிறப்பு பெற்ற சோழ மன்னன் கட்டிய பொலன்னறுவை சிவன் ஆலயத்தில் பல தசாப்த காலத்திற்கு பிறகு சிவராத்திரி விசேட பூஜை நடைபெற்றது.

இது இலங்கை வாழ் இந்துக்கள் மத்தியில் புத்துணர்ச்சியையும், உத்வேகத் தையும் தோற்றுவித்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பூரண அனுசரணையுடன் சமன்பிட்டி வாழ் மக்களினால் பாலன் சுதாகரனின் தலைமையில் அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன.

இதன்போது பூஜைகளில் பௌத்த சமய துறவிகளும், மாணவ சிறார்களும் கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.15

வண்ணை வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர் கிணற்றடி ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு காரை எம்.பி.அருளானந்தனின் தெய்வீகப் பேருரை சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. 15 ஆம் நாளான முதலாம் திகதி வியாழக்கிழமை பகல் சங்காபிஷேகம், அன்னதானம் ஆகியன இடம்பெற்று மாலையில் திருமதி கவிதா வாமதேவன் குழுவினரின் வீணைக் கச்சேரியும் விசேட நிகழ்வாக நடைபெறவுள்ளது. (இ)

* * * * *

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி திருவருள் மிகு ஸ்ரீ சிவ மஹா காளி அம்பாள் தேவஸ்தான 13 ஆம் ஆண்டு பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மாசிமகத்தில் வரும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். முதல் 5 நாள்கள் விநாயகர், சுப்பிரமணியருக்கும் மிகுதி பத்து நாள்களும் அம்பாளின் அனுக்கிரகப்படி அம்பாளின் பெருந்திருவிழா நடைபெறும். அனைத்து அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றனர் ஆலயத்தினர் (இ)

# பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோருக்கு பயிற்சி வகுப்புகள்

சாவகச்சேரி,பெப்.15

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்வி அலகினால் 2018 ஆம் ஆண்டுக்கான முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் மணப்பெண் அலங்காரம், வீட்டு மின் சுற்று தையல் ஆகிய பயிற்சி வகுப்புக்கள் இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளையோர் பயிற்சி நிலையங்களுக்கு வந்து பதிவு செய்து பயிற்சிநெறிகளில் பங்குபற்றலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

மணப்பெண் அலங்காரப் பயிற்சிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் வீட்டு மின்சுற்றுப் பயிற்சிகள் நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையிலும் தையல் பயிற்சிகள் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் ஆரம்பிக்கப் படவுள்ளன. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# புதுக்குடியிருப்பில் 'ஒளிரும் வாழ்வு' திறப்பு விழா

"ஒளிரும் வாழ்வு', புதுக்குடியிருப்பு அலுவலகம் மற்றும் செயற்கை அவயவங்கள்திருத்தும் நிலைய திறப்பு விழா உடையார்கட்டில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இடம் பெறும்.

நிகழ்வில்முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரும் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் தயாளசீலன் பூங்கோதை, மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ந.ஸ்ரீஸ்கந்த ராஜா, புதுக்குடியிருப்பு பொலிஸ் திணைக்களம் எம்.டி.சந்தி பாலா, மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் தசரத ராஜகுமாரன் மதிப்புறு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**யாழ். பிரதேசத்தில்**- உசன், விடத்தற்பளை, கெற்பேலி, கிளாலி, ஆகிய பிரதேசத்திலும்-

**கிளிநொச்சிப்பிரதேசத்தில்**-கொக்காவில் இராணுவப் பயிற்சிப்பாசறை, கொக்காவில் இராணுவ முகாம் I, கொக்காவில் இராணுவ முகாம் II, ஆகிய பிரதேசத்திலும்-

**வவுனியா பிரதேசத்தில்**- கோவில் குளம், ஆச்சிபுரம், சமனன்குளம், மகா மயிலங் குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரியகூமர சங்குளம், ஆசிக் குளம், சிதம்பரபுரம், குருக்கள்புதுக்குளம், குருக்களூர், பறையனாலங்குளம், ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# உள்ளூராட்சித் தேர்தலின் எதிரொலி:

# தமிழரசு கட்சியும் தலைமைகளும்

## தம்மைத் தாமே கேள்வி கேட்கும் பரிதாப நிலையில்!

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சீ.வீ. விக்னேஸ்வரன் வாரத்துக்கொரு கேள்வி வரிசையில் இவ்வாரக் கேள்விக்கு பதிலளித்துள்ளார்.

இவ்வாரக் கேள்வி ஊடகவியலாளர், தம்பித்துரை பிரதீபனிடம் இருந்து வந்துள்ளது.

**கேள்வி:**

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்க்கும்போதுதமிழ்மக்களின்மனநிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் தமிழ்த் தலைமைகள் மீது அவர்களுக்கு ஒரு வெறுப்பினை அல்லது அவநம்பிக்கையினைஏற்படுத்தியுள்ளமைதெளிவாகின்றது. அதேவேளை தெற்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் மீண்டும் இனவாதம் இன்னமும் உயிர்ப்புடன் இருப்பதையே தெளிவுபடுத்துகின்றது. அந்த வகையிலே இந்தத் தேர்தல் முடிவுகளை நீங்கள் எவ்வாறு கருதுகின்றீர்கள்? தமிழ் மக்களுக்காக நீங்கள் கூற விரும்புவது என்ன?

**பதில்:**

நான் கொழும்பு சென்று வந்து வவுனியாவில் இரு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதால் தேர்தல் முடிவுகள் பற்றிய முழு அறிவையும் இன்னமும் பெறவில்லை. இத்தேர்தல் முடிவானது பொதுவாகக் கூறுவதானால் வடகிழக்கு மாகாணங்களில் பல கட்சிகளுக்கு வாக்குகள் பிரிந்து சென்றுள்ளமையையும் ஒரு சில மன்றங்களைத் தவிர எந்த ஒரு கட்சியும் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாமல் இருப்பதையும் உணர்த்தி நிற்கின்றது . அதேவேளை, தமிழ் மக்கள் பொதுவாகத் தமது தலைமைகளின் மீது நம்பிக்கை இழந்து அதிருப்தி உற்றிருக்கின்றார்கள் என்பதையும் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. மாற்றம் ஒன்றை மக்கள் விரும்பியிருக்கின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனால்தான் சில கட்சிகளுக்கு வீழ்ச்சியும் சில கட்சிகளுக்கு எழுச்சியும் ஏற்பட்டிருக்கின்றன.

**யாழில் வாக்கெடுப்பு பெரு வீழ்ச்சி**

காலாதிகாலமாக ‘வீடு’ சின்னத்திற்கு வாக்களித்தபலர்தற்போதையதலைமைத்துவத்தைப் பிடிக்காததாலோ என்னவோ அவர்கள் இம்முறை யாழ் மாவட்டத் தேர்தலில் ஈடுபடவில்லை என்று தெரிகின்றது. உதாரணமாக இத் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் கிளிநொச்சியில் 74.82வீதமும் முல்லைத்தீவில் 77.49வீதமும் மன்னாரில் 81.38 வீதமும் வவுனியாவில் 74.03வீதமுமாக இருக்க யாழ் மாவட்டத்தில் 70.84வீதத்தினரே வாக்களித்துள்ளார்கள். சில புள்ளி விவரங்கள் இன்னும் குறைத்தே யாழ் வாக்களிப்பைக் குறிப்பிடுகின்றன. அரசாங்க புள்ளி விவரங்களின் படி தமிழரசுக்கட்சி 2015ஆம் ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குத் தொகை 515963. இம் முறை அத்தொகை 339675 ஆகக் குறைந்துள்ளது. 34 சதவீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

எமது உரிமைகளை,உரித்துக்களை தொடர்ச்சியாக ஆணித்தரமாக எமது புலம்பெயர் மக்களின் பிரதிநிதிகளையும் முன்வைத்து அரசாங்கத்திடம் நீதியானவற்றை, நியாயமானவற்றைப் பெற்றுக் கொள்வதில் எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல் தீர்க்கதரிசனத்துடன் செயற்பட்டிருந்தால் தெற்கில் யார் வந்தாலும் எம்மவர் பயப்படத்தேவையிருந்திருக்காது. சுயநலன் தரக்கூடிய வெளிநாட்டு உள்ளீடல்களால் மக்களுடன் கலந்தாலோசியாது பலவிட்டுக் கொடுப்புக்களை இன்றைய ஆட்சிக்காக எமது தலைமைகள் ஏற்படுத்திக் கொடுத்தமை தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் எம்மை மேலும் பலவீனப்படுத்தி இருக்கின்றதோ என்று சிந்திக்க வைக் கின்றது.

**வடக்கு சபைக்கு இடையூறு; தமிழரசுவின் ஒரு பகுதியினர்**

ஒருசிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் காரணமாக வடமாகாண சபையின் நிர்வாகங்களைச் சரியான முறையில் செய்யவிடாமல் தமிழரசுக் கட்சியின் ஒரு பகுதியினர் பல இடையூறுகளை ஏற்படுத்தி இருந்தனர். மேலும் எம் மக்களையும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் அந்நியப்படுத்தி இருட்டறையில் தள்ளிவிட்டு தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப எமது தீர்வு விடயத்தை ஒரு சிலரே தனியாகக் கையாண்டார்கள். முதலமைச்சரான எனக்கே என்ன நடைபெறுகிறது என்று தெரியாத நிலையில் மக்களின் நிலைமை என்னவாக இருந்திருக்கும் என்று பல சமயங்களில் நான் எண்ணிப்பார்த்த துண்டு. இவை யாவும் வெளிப்படைத் தன்மையற்ற படி முறைமையின் பிரதிபலிப்புக்களே. ஆகவே இந்த உள்ளூராட்சித் தேர்தல் தமிழரசுக்கட்சியையும் அதன் தலைமைகளையும் தம்மைத்தாமே கேள்வி கேட்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளியுள்ளது என்று கூறலாம். அசைக்க முடியாது என்றிருந்தவர்கள் நிலநடுக் கத்தை அனுபவித்துள்ளார்கள்!

இனியாவது ஓரிருவர் முடிவுகளை எடுக்கும் நிலை மாற்றப்பட்டு சகலரையும் பங்குதாரர்களாக உள்வாங்கி ஆக்கபூர்வமான தீர்க்கதரிசனம் மிக்க செயற்பாடுகளை கட்சிவேறுபாடுகள் கடந்து முன்னெடுத்து எமது மக்களுக்கான பணியை ஆற்ற நாம் யாவரும் ஒன்று கூட வேண்டும்.



**கொள்கை அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டிய நேரம்**

அதேவேளைஉள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பதில் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ்க் கட்சிகள் கொள்கை அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும். இந்தத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவாக நான் செயற்படவில்லை. அதனால் நீங்கள் இப்படித்தான் செய்யவேண்டும் என்று எந்த ஆலோசனையையும் எந்தக் கட்சிக்கும் நான் கூற விரும்பவில்லை. ஆனால் கொள்கையில் நாம் யாவரும் ஒற்றுமைப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கொள்கையில் எம்மவர் ஒன்றிணைவார்களா? சுயநலம் மேலோங்கும் போது கொள்கைகள் மீதான பற்று குறைந்துவரும்.

அடுத்து நான் அறிந்த வரையில் நாட்டிலும் தமிழ் மக்கள் சம்பந்தமா கவும் மேலெழுந்த வாரியாக மூன்று விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று சிங்கள மக்களின் காவலனாய் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இன்னமும் அடையாளப்படுத்தப்படுகின்றார் என்பது. இதை இனவாதத்தின் பிரதிபலிப்பாக நான் பார்க்கவில்லை. பல காரணங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து அவரை முன்னிலைப்படுத்தியுள்ளன. இரண்டு நல்லாட்சி அரசாங்கம் தமிழர்களைப் பொறுத்த வரையில் நன்றி மறந்து, நாட்டைப் பொறுத்தவரையில் நல்லாட்சியிலும், மக்களின் பொருளாதார முன்னேற்றத்திலும் கரிசனை காட்டாது இதுவரையில் நடந்து வந்துள்ள நடைமுறை.அத்துடன் ஊழலைக் கட்டுப்படுத்தத்தீர்க்கமான முடிவுகளைஎடுக்காமையும் ஒரு காரணம். மூன்று தமிழ் மக்களுக்கு ஒரு முகம் அரசாங்கத்திற்கு இன்னொரு முகம் காட்டிய தமிழ்த் தலைவர்கள் இன்று சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ளார்கள். இவற்றை ஒவ்வொன்றாக நான் பரிசீலனைக்கு எடுக்கின்றேன்.

1. சிங்கள மக்களின் காவலனாக மஹிந்த .

தேர்தலுக்கு முதல் நாள் கொழும்பு சென்ற வழியில் நான் பேசிய பல சிங்கள சாதாரண மக்கள், அதுவும் விவசாயத்துடன் தொடர்புடையவர்கள், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உரம் பற்றிப் பிரஸ்தாபித்தார்கள். மஹிந்த 350 ரூபாவுக்கு மானிய அடிப்படையில் உரப்பை ஒன்றை விநியோகித்தார் எனவும் தற்போதைய அரசாங்கம் அதை எட்டிலிருந்து பத்து மடங்கு அதிகரித்து விட்டது என்றுங் கூறினார்கள். இன்று அதன் விலை ரூ 3000 க்கு மேல் போய்விட்டது என்றார்கள். தற்போதும் உரம் கிடைக்காது தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் கூறினார்கள். இவ்வாறு செய்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மைத்திரிக்கு நாம் எவ்வாறு வாக்களிக்க முடியும் என்று கேட்டார்கள்.

**எம்மவர்களுக்கு ஒரு முகம் அரசுக்கு இன்னொரு முகம்**

## தமிழ்த் தலைவர்கள் இன்று சந்தேகத்துக்குரியவர்களாக...!

**இடைக்கால அறிக்கை: இல்லாததை இருப்பதாக கூறப்போய் சிங்களவர்களுக்கு சந்தேகம்**

மேலும் ஊழலில் ஈடுபட்டார்கள் என அரசாங்கத்தால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள் ஏன் சட்டம் முன்பு ஆஜராக்கப்படவில்லை என்று கேட்டார்கள். வழமைபோல் அரசியல் காரணங்களுக்காகத்தான் அவர்கள் ஊழல் பேர்வழிகள் என்று குறிப்பிடப்பட்டார்கள் என்றும் உண்மையில் அவ்வாறு இருந்திருக்க முடியாதென்றும் சிங்கள மக்களிடையே ஒரு கருத்து வலுப்பெற்றிருந்தது போல்த் தெரிந்தது. மூன்றாவதாக தமிழ் அரசியல் தலைவர்கள் இடைக்கால அறிக்கையில் இல்லாததை இருப்பதாகக் கூறப்போய் அது சிங்கள மக்களின் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது. அதனையும் அவர்களே குறிப்பிட்டார்கள். குறிப்பிட்ட ஒரு தமிழ்ப் நாடாளுமன்ற அங்கத்தவர் தமிழர்களைக் கவர பொய் பேசப்போய் அதைச் சிங்களவர்கள் உண்மை என்று நம்பி விட்டார்கள். நான்காவது ஆளும் கட்சிக்குள் ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் உள்நுழைந்ததால் நிலைமை மோசமடைந்தது. ஒரு பலமுடைய தலைமைத்துவம் இல்லாது இரு தலைமைப்பீடங்கள் இருந்து வந்தமையும் குறையாகக் கூறப்பட்டது.ஐந்தாவது தாம் பதவிக்கு வந்தமை எவ்வெளர்களின் ஒத்துழைப்புடன் என்பதை அரசாங்கம் மறந்து விட்டுள்ளமை அவர்களையே சாடியது. தமது கடமை என்னஎன்பதில் ஆளும் கட்சி பிழையான சிந்தனைகளைக் கொண்டிருந்தது.

இவை யாவும் மஹிந்தவின் நிலையை வலுவூட்டச் செய்தது.

2. நன்றி மறந்த அரசாங்கம் நல்லாட்சியையும் மறந்தது.

**ஏதோ தரப்போகிறார்கள் என்ற மாயையில் சிக்கிய எமது தலைவர்கள்**

தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழர்களின்கரிசனைகள், பிரச்சினைகள், நாளாந்த இடர்பாடுகள்போன்றவை தமிழ்த் தலைமைகளால்அரசாங்கத்துக்கு இதுகாறும் உரக்க எடுத்துக்கூறப்படவில்லை. எடுத்துக்கூறப்பட்டாலும் செவிடன் காது சங்காகவே அது மாறியது.ஆனால் எமது தலைவர்கள் 2016ம் ஆண்டிலேயே ஏதோ தரப்போகின்றார்கள் என்ற மாயையில் எதிர்பார்த்து இருந்தார்கள். இன்று இலவு காத்த கிளிகளாக ஆகியுள்ளார்கள்.

அரசாங்கமும் வெறுமனே அரசியல் யாப்பு மாற்றம் பற்றிக் கூறிக் காலத்தைக் கடத்தி வந்துள்ளது. இன்னுமொரு மாதத்தில் போர்க்குற்றம் பற்றி ஐ.நாவுக்கு முன்னேற்ற அறிக்கை கொடுக்க வேண்டும் என்பதைப் பெரிதாக அவர்கள் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அதனால்’மஹிந்த வந்தார்’ என்பதைக் காட்டி அவர்கள் யாவரையும் மடக்கி விடுவார்கள் போலத் தெரிகின்றது. பொய்யும் புரட்டுமே ஆயுதங்களாக அரசாங்கத்தால் பாவிக்கப்பட்டு வரக்காண்கின்றோம். அதற்கு எம்மவர் துணைபோயிருந்தமை மனவருத்தத்தைத் தருகின்றது.

3. தமிழ்த் தலைமைகளின் முகங்கள்.

தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள விரக்தி நிலையை அறிந்தவுடன் எப்படியாவது பதவியைத் தொடர்ந்து காப்பாற்றும் யுக்திகளையே எமது தலைமைகள் தேடி வருகின்றன. நான் பலமுறை கூறிவந்த ஒற்றுமை பற்றி இப்பொழுது தாமா கவே பிரஸ்தாபிக்கத் தொடங்கியுள்ளனர். கொள்கை ரீதியாகத் தாம் இதுகாறும் பின்பற்றிய பாதை பிழை என்பதை ஏற்க மறுக்கின்றனர். மாறாக அப் பிழையான பாதைகளில் போயே தமது பதவிகளைக் காப்பாற்ற முனைந்து வருகின்றனர். இப்பொழுது சில வெளிநாடுகளின் உள் நுழைவுடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அறிய வருகின்றது.

EPDP ஐ துரோகி என்றெல்லாம் கொட்டித்தீர்த்தவர்கள்தான் இப்போது அவர்களுடன் சேர்ந்து யாழ் மா நகரசபையில் நிர்வாகம் அமைக்கப் பிரயத்தனம் எடுத்து வருகின்றார்கள்.டக்ளஸ் மத்திய அமைச்சராவதை நாம் எதிர்க்க மாட்டோம் என்று கூறியுள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)











அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 70 ஆவது சிரார்த்த தினம் அண்மையில் யாழ். நகரில் அனுஷ்டிக்கப்பட்டபோது சங்கத்தின் பொதுச் செயலாளர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையுரை ஆற்றுகின்றமையையும் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் சதா. நிமலன் காந்தி உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகின்றமையையும் பிரதம விருந்தினர் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜன் உரையாற்றுகின்றமையையும் பேராசிரியர் என். சண்முகலிங்கன் மற்றும் சங்க உறுப்பினர் நகுலேஸ்வரி விருந்தினர்களுக்கு கதராடை போர்த்தி கௌரவிக்கின்றமையையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (இ)

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**தமிழ்த் தலைமைகள் தமக்கான பதவிகளைத் தக்க வைக்க குறிவைத்துள்ளனவா?**

EPDPஅப்போதைய அரசாங்கத்துடன் சேர்ந்து செய்த செயற்பாடுகளிலேயே தற்போது எமது தலைமைகளும் இறங்க உள்ளன என அறிய வருகின்றது. நாடாளுமன்ற சபாநாயகர் பதவி, வெளிநாட்டு அமைச்சர் பதவி, மீள்குடியேற்றப் பதவிகளில் எமது தலைமைகளை இறக்கி தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனப் பத்திரிகைவாயில்களாக அறிகின்றேன். தமிழ் மக்கள் தமது உள்ளக் கிடக்கைகளை எதிர்ப்பாகத் தெரியப்படுத்தியிருக்கும் வேளையில் இடைக்கால அறிக்கையையே முன்வைத்துத் தமிழ்த் தலைமைகள் தமக்கான பதவிகளைத் தக்க வைக்கக் குறிவைப்பதாகத் தெரிகின்றது. இதனை மறுத்து செய்திகள் வருகின்றமையையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. சேர்ந்து முடிவெடுத்து நாம் பழகாததால் எதனையுமே நாம் முற்றாக நம்ப முடியாத நிலை எம்மிடையே ஏற்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் உங்கள் கேள்வியில் குறிப்பிட்டவாறு தமிழ் மக்களின் சிந்தனைகளில் மாற்றம் பிறக்கத் தொடங்கியிருப்பது உண்மையே. அது வெறுப்பு என்று கூற மாட்டேன். அவநம்பிக்கை என்பதே பொருத்தமான சொல். தெற்கிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனை நாம் இனவாதம் தலைதூக்கியுள்ளதாகக் கணிக்க முடியாது. நாங்கள் எமது பாரம்பரியங்கள், வரலாறு, கலைகள், எமது தனித்துவம், அரசியல் சுதந்திரம் போன்றவற்றை வெளிப்படையாகக் கூறும் போது சிங்கள மக்கட் தலைவர்களும் அவ்வாறான கருத்துக்களை வெளிக்கொண்டு வருவது இயற்கையே. அதனால் ஏற்படக் கூடிய முறுகல் நிலையைத் தவிர்க்கவே மஹிந்த தனது மகன் நாமலை தமிழர் கரிசனைகள் பற்றி வெளிப்படையாகத் தேர்தல் முடிந்த பின் பேச வைத்திருக்கின்றார் என்று கொள்ள வேண்டும்.

அரசியலானது செய்யக்கூடியதைச் செய்யும் கலை என்றார் ஜேர்மன் அறிஞர் ஒருவர் (Politics is the art of the possible). மஹிந்த வாக்குறுதிகளைப் பெற இனவாதக் கருத்துக்களைப் பாவிக்கும் அதே நேரம் இன வாதம் தலைதூக்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார். மேல் நாட்டவர் மஹிந்தவை எதிர்ப்பது சீனா எம் நாட்டில் காலடி ஊன்றக் கூடாது என்பதாலேயே.

நாளைக்கு மேற்குலகுடன் சேர மஹிந்த முன்வந்தால் மைத்திரியும் ரணிலும் தூக்கி எறியப்படுவார்கள். ஆகவே இனவாதத்தைத் தூண்டும் ஒரு செயலாக

**எம் மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் இருட்டறையில் தள்ளிவிட்டு தீர்வு விடயத்தை ஒரு சிலரே கையாண்டதால் இன்று....?**

மஹிந்த வின் செயல்களை நான் பார்க்கவில்லை. அவர் இனவாதக் கருத்துக்களை வெளி யிடுகின்றார் என்று அவரை எதிர்க்க வேண் டிய அவசியமும் இல்லை. மேலைத் தேயத் தவர்களுக்கும் தற்போதைய அரசாங் கத்திற்கும் மேற்குலக மதங்களுக்குக் கட்டுப்பட்டிருப்போர்களுக்கும் மஹிந் தவைப் பேய் பிசாசு என்று குறிப்பிடத் தேவையிருக்கலாம். அது தமது சுயநலங்களுக்காக என்பதை நாம் மறத்தலாகாது.

எந்தவகையில் இந்தத் தேர்தல் முடிவுகளை கருதுகின்றீர்கள்? தமிழ் மக்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன? என்பதே உங்கள் கேள்வியின் அந்தமாகத் தரப்பட்டுள்ளது.

மனிதர்களாகிய நாங்கள் எப்பொழுதுமே இருக்கும் நிலையிலேயே தொடர்ந்து அமைதி கலையாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். ஆனால் வாழ்க்கை அதற்கு இடங்கொடுப்பதில்லை. நடைமுறையைக் குழப்ப நிகழ்வுகள் வந்த வண்ணமே இருக்கும். என் நண்பர் ஒருவர் 1983ம் ஆண்டில் இலங்கை பொருளாதார ரீதியாக முன்னேறி வருகின்றது, திறந்த பொருளா தாரக் கொள்கையை ஜே.ஆர் கொண்டு வந்தது முதல் வெளிநாட்டு முதலீடுகளை அரசாங்கம் உள்ளேற்கின்றது என்பது கண்டு இலங்கையில் முதலீடு செய்ய இங்கிலாந்தில் இருந்து ஜூன் மாதமளவில் வந்து பலருடன் கலந்துறவாடி மகிழ்வுடன் இருந்தார். ஆனால் ஜூலை 23ஆம் திகதி அவரை உள்ளூர் இடம்பெயர் மக்களின் முகாமுக்கு கூட்டிச் சென்று, பல இடர்பாடுகள் மத்தியிலே திரும்பவும் இங்கிலாந்தைச் சென்றடைய வைத்தது. முன்மொழிவு மனிதனுடையது. பின் விளைவு இறைவன் சித்தம். (Man proposes; God disposes)

பதவிகளில் ஒட்டி நின்று மக்கள் நிலையறியாது இருந்தவர்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியைத் தந்துள்ளமை உண்மைதான். அதிர்ச்சியில் இருந்து விடுபட சில காலம் போகும். ஆனால், அவர்கள் யாவரும் தமது குறைபாட்டை முற்றாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனினும் தமது குறைபாடுகளை எமது சிங்கள, தமிழ் அரசியல் தலைவர்கள் மீளாய்வு செய்ய இது தக்க தருணமாய் அமைந்துள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒற்றுமை அவசியம் என்பதை அடுத்தடுத்துக் கூறிவருகின்றேன். கட்சிகள் சுயநலத்துக்காக ஒன்றுபடுவன. ஆனால் தமிழ் மக்கள், கட்சிகளின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற் ஒரு சென்று ஓர் இயக்கமாய் ஒருங்கிணைந்து தமது உரிமைகளைப் பெற அஹிம்சை வழியில் போராட வேண்டும். தமிழ்த் தலைமைகள் கட்சிப் பாகுபாடு இன்றி கொள்கையால் ஒன்றுபட்டு அரசாங்கத்திற்கு எமது கருத்துக்களையும் கஷ்டங்களையும் எடுத்துரைக்க வேண்டும். அரசியல் யாப்பு மாற்றங்கள் எல்லோரின் ஒத்துழைப்புடன் மீண்டும் தொடங்க வேண்டும். மாற்றங்கள் என்று கூறும் போது மாற்றத்துக்கான சூழல் ஏற்படுத்தப்பட்டு வெளிப்படையாக அது பற்றிய செயற்றிட்டம் வகுக்கப்பட்டு, முடிவெடுத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இத் திட்டத் தயாரிப்பில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டிஷ் ஐக்கிய நாடுகள் போன்றவற்றின் பேராளர்களும் அதில் பங்குபற்ற வேண்டும். வெளிநாடுகள் வேண்டாம், புலம்பெயர்ந்தோர் வேண்டாம் என்று கூறுவது பெரும்பான்மை அரசியல் வாதிகள் தமக்கிருக்கும் அதிகாரங்கள் குறைந்து விடுமே என்ற ஆதங்கத்தால். அதனால் தான் எமது பிரச்சினை தீராது இதுவரையில் இழுபட்டுக் கொண்டிருக்கின்றது.

வெளிநாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளும் புலம்பெயர் தமிழர்தம் பேராளர்களும் 1987ல் 13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்படுத்திய இந்திய நாட்டின் பிரதிநிதிகளும் சேர்ந்திருந்து இலங்கையின் இனப்பிரச்சினையை அலசி ஆராய்ந்து முடிவுக்கு வருவதே உசிதம். அவ்வாறான கருத்துப் பரிமாற்றத்திற்கான நெருக்குதல்களை நாம் ஏற்படுத்த வேண்டும். எவ்வாறு எமக்கென ஏற்படுத்தப்பட்ட 13 வது திருத்தச் சட்டம் நாடு முழுவதற்கும் ஏற்புடைத்தாக்கப்பட்டதோ அதேவாறு நாம் யாவரும் சேர்ந்து ஐக்கிய சோஷலிச சமஷ்டிக் குடியரசொன்றை நிறுவ முன்வர வேண்டும். ஒன்பது மாகாணங்களும் சமஷ்டி அலகுகள் ஆக்கப்பட்டு எந்த இரு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களும் ஒருவரோடு ஒருவர் இணைய இடமளிக்க வேண்டும். இவ்வாறான செயல் ஒவ்வொரு மாகாணமுந் தனித்தனியாகவும் மற்றவர்களுடன் சேர்ந்தும் முன்னேற வழி வகுக்கும். தத்தமது தனித்துவத்தை மாகாணங்கள் ஒவ்வொன்றும் பேண வழி வகுக்கும். அதற்குநாம் சமஷ்டி சம்பந்தமான உண்மை நிலையை உலகறியச் செய்ய வேண்டும். தமிழ் மக்களுக்கு நான் ஆணித்தரமாகக் கூறவிரும்புவது கொள்கை ரீதியில் ஒன்றுபடுங்கள். சில்லறை நலன்களை ஆட்சியாளர்களிடம் இருந்து பெற முனைந்தீர்களானால் நீங்கள் காலாகாலத்தில் பெரும்பான்மையினரின் வலைக்குள் சிக்கி நாளடைவில் உங்கள் தனித்துவத்தை இழந்து விடுவீர்கள். அம்பலாங்கொடை, பலப்பிட்டிய, நீர்கொழும்பில் இருந்து கற்பிட்டி வரையான பிரதேசத்தில் தமிழர்களாக இருந்த எம் மக்கள் சிங்களவர்களாக மாறியமையை மறந்துவிடாதீர்கள்.

★

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



# ரயிலிலிருந்து கடத்தப்பட்டோம்

### மீண்டும் விடுதலை

காலை பதினொரு மணியளவில் அவர்களுள் உயர் பதவி வகித்த ஒருவன் மீண்டும் வந்து எங்களை ரயில்வே ஸ்ரேசனில் கொண்டு போய் விடுவதாய்ச் சொன்னான். எங்களை முதலில் விசாரித்தது பொலிஸ் சி.ஐ.டி என்றும், கடத்தி வந்து விசாரித்தது ஆமி சி.ஐ.டி என்றும் அவன் சொல்லத் தெரிந்துகொண்டோம். பதினொரு மணியளவில் எங்களை, அவர்களது இராணுவ ஜீப்பில் ஏற்றிக் கொண்டு, ரயில் நிலையத்திற்கு அழைத்துப் போனார்கள். நாம் இராணுவ ஜீப்பில் வந்து இறங்கியதை புலிகள் அறிந்தால் இராணுவத்தின் கையாட்கள் இவர்கள் என ஐயப்பட்டு, எம்மைக் கொல்லக் கூடும் எனப் பயந்து, முகத்தை மூடி, தலையைக் குனிந்தபடி ஜீப்பினுள் இருந்தோம். பின்னர் ரயில் நிலையம் வந்து கொழும்பு பயணமானோம்.

கொழும்பு வந்து சேரும் வரை வேறு யாரும் இடையில் மீண்டும் வந்து கடத்துவார்களோ? என அஞ்சியபடி இருந்தோம். எங்களுக்கு ஒரு சிறு தீங்கும் செய்யாத அந்த இராணுவக்குழு, கடுமையான சித்திரவதைகளையும் செய்வார்கள் என, பின்னர் அறிந்தபோது நடுநடுங்கிப் போனோம். பருத்தித்துறை குகனது மகனை அவர்கள் பிடித்து, பெற்றோல் ஊற்றிய ‘ரிசு’ப்பையால் அவர் முகத்தைச் சுற்றிக் கட்டி, விசாரித்ததாய் பின்னர் அவர் சொல்லக் கேள்விப்பட்டேன். அவர்கள் விரல் நுனியும் எங்கள் மேல் படாமல் அன்பும், ஆதரவும் செய்து எங்களை அனுப்பி வைத்தது ஆண்டவனது அருள் அன்றி வேறெதுவாய் இருக்க முடியும்?

★ ★ ★

### கொழும்பு வந்தோம்

இன்னல்கள் தாண்டி கொழும்பு வந்து சேர்ந்தோம். முதல் நாள் இரவு நாம் கடத்தப்பட்ட செய்தி, கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. என் தங்கை, அக்கா குடும்பத்தினர் அச் செய்தியைப் பார்த்து கலங்கிப் போயிருந்தனர். நாம் கொல்லப்பட்டு விட்டதாகவே அவர்கள் நினைத்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் அச் செய்தியைப் பார்த்து சிவராமலிங்கம் மாஸ்ரரும், கழக இளைஞர்களும் கலங்கிப் போனார்களாம். எல்லோருக்கும் எதுவும் செய்யமுடியாத கையறுநிலை. நாங்கள் வந்து இறங்கியதும் வீடு மகிழ்ச்சியில் நிறைந்தது. வெள்ளவத்தை தர்மராம வீதியின் ஒரு குறுக்கொழுங்கையில் சிறிய வீடொன்றினை எடுத்து அக்கா, தங்கை இருவரது குடும்பங்களும் தங்கியிருந்தன. ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு அறைகளும் குசினியும் அமைந்த வீடு அது. ஒன்றுக்கூடாகத் தான் மற்றைய அறைக்குச் செல்ல வேண்டும். இருக்கக் கதிரை இல்லை, படுக்கக் கட்டில் இல்லை. ஆனாலும், பட்ட கஷ்டத்தில் அந்த வீடு கூட, சொர்க்கமாய்த் தெரிந்தது. நான்கு நாள் களைதீர, கூடத்தில் பாய் விரித்துப் படுத்துறங்கினோம்.

★ ★ ★

### பி.பி.சி. பேட்டி கேட்டது

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியிருந்த நேரம் அது. புலிகள் எந்நேரமும் எதுவும் செய்யலாம் என எதிர்பார்க்கப்பட்டதால். நாடு முழுவதும் கடும் உசார் நிலையில் இருந்தது. இலங்கைச் செய்திகளை வெளிநாட்டு ஊடகங்கள் எல்லாம் பரபரப்பாய் வெளியிட்டுக் கொண்டிருந்தன. நாம் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதை எப்படியோ அறிந்து, எங்கள் தொலைபேசி இலக்கத்தைத் தேடிப் பிடித்து பி.பி.சி. ஆனந்தி என்னுடன் தொடர்பு கொண்டார். “கட்டடம் புலிகளினதா? ஏன் நீங்கள் கடத்தப்பட்டீர்கள்”, என்றெல்லாம் கேள்விகள் தொடுத்தார். அப்போதிருந்த அபாயகரமான சூழ்நிலை அறிந்து, பேட்டி தர மறுத்துவிட்டேன்.

## ஸ்ரீதரசிங்குடன் மீண்டும் கைதானோம்

இரவு ஏழு மணியிருக்கும் திடீரென ஒரு பொலிஸ் ஜீப் எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பொலிஸார், வீட்டைத் தலை கீழாக்கிச் சோதனை செய்தனர். பின்னர் ரத்தினகுமாரையும், குமாரதாசனையும், என்னையும் ஜீப்பில் ஏறச் சொன்னார்கள். குமாரதாசனின் மகன் பிரசன்னா கதறியழுதான். அவன் அழுததைக் கண்டு வந்த இன்ஸ்பெக்டரே சங்கடப்பட்டான். “விசாரித்து விட்டு அப்பாவைக் கொண்டு வந்து விடுவோம்” என, பிரசன்னாவுக்கு ஆறுதல் சொன்னான். ஜீப் கதவைத் திறந்து எங்களை ஏறச் சொன்னான். உள்ளே பார்த்தால் ரகுபரனும், ஸ்ரீதரசிங்கும் உட்கார்ந்திருந்தனர். ரகுபரன் அதே சிரிப்புடன் இருந்தான். ஸ்ரீதரசிங் நடுநடுங்கிப் போயிருந்தார். வவுனியா இராணுவ முகாமில் அவர்கள் முகவரியை நாம் கொடுத்ததால் அவரையும் கைது செய்திருந்தார்கள். ஸ்ரீதரசிங்கும், அவர் குடும்பத்தாரும், எங்களோடு மிக நெருங்கியிருந்தனர். யாழ்ப்பாணத்தில் ஒரு முறை புலிகள் ஒரு சிறு பிரச்சினைக்காக ஸ்ரீதரசிங்கின் தம்பியார் ராஜனைக் கடத்தி வைத்திருந்தனர். அப்போதெல்லாம் அவர்களுக்காக புலிகளுடன் நான் போய்ப் பேசினேன்.


**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 96**

அந்த நெருக்கம் பற்றிய உரிமையிலேயே அவர்களைக் கேட்காமலே அவர்களின் முகவரியை நாம் கொடுத்திருந்தோம். அதனால் தான் ஸ்ரீதரசிங்கும் கைதாக வேண்டி வந்தது. அந்நேரத்தில் அவர் குடும்பத்தார் சிலர் நாம் அவர்களது முகவரி கொடுத்தது பற்றி வெறுப்படைந்ததாய் அறிந்து வருந்தினேன். ஆனால், ஸ்ரீதரசிங் துளியும் அப்படி நினைக்கவில்லை என்பது பின்னர் தெரிந்தது. அது பற்றிப் பின் சொல்கிறேன்.

★ ★ ★

### மீண்டும் விசாரணை

கைது செய்த பொலிஸார் கல்கிசைப் பொலிஸ் ஸ்ரேசனுக்கு எம்மை அழைத்துச் சென்றனர். மேல் மாடியிலிருந்த விருந்தினர் இருக்கையில் எம்மை இருக்கச்



## உன்னைச் சரணடைந்தேன்

சொல்லிவிட்டு முதலில் என்னை விசாரிக்க உள் அழைத்தார்கள். ஒரு சிங்கள பொலிஸ் இன்ஸ்பெக்டரும் தமிழ் தெரிந்த பொலிஸ் காரருமாக விசாரணையை நடத்த முயன்றனர். மூன்று நாள்களாக அடுத்தடுத்து விசாரிக்கப்பட்டு, களைத்துப்போயிருந்த எனக்கு மீண்டும் விசாரணை என்றவுடன் கடுங்கோபம் வந்தது. நான் சொல்வதை இன்ஸ்பெக்டருக்குச் சொல்லும்படி பொலிஸ்காரனுக்குச் சொல்லி விட்டுப் பேசத் தொடங்கினேன். “எங்களோடு அளவுக்கதிகமாய் விளையாடுகிறீர்கள், ஏற்கனவே இரண்டு, மூன்று தரம் விசாரித்து விட்டு மீண்டும் விசாரிக்கக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எங்கள் ஊரில் இருக்கையில் பொலிஸ் ஸ்ரேசன் வாசலைக் கூட மிதித்தறியாதவர்கள் நாங்கள். எங்கள் தோற்றத்தைப் பார்த்து நாம் நல்லவர்களா? கெட்டவர்களா? என மதிக்க முடியாத நீங்கள் எப்படி விசாரித்தும் உண்மையைக் கண்டு பிடிக்க மாட்டீர்கள். எனவே நீங்கள் எதனைக் கேட்டாலும் நான் பதில் சொல்லப்போவதில்லை.” என உறுதியாய்ச் சொன்னேன். அந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். படித்தவன், துவேசம் இல்லாதவன், எனது உணர்வை அவன் புரிந்து கொண்டான். “நீங்கள் நல்லவர்கள் என்பது எனக்குத் தெரிகிறது கவலைப்படாதீர்கள், காலையில் மேலதிகாரிகள் வந்ததும், உங்களை அனுப்பி வைக்கிறேன்.” எனச் சொல்லிப் போய் விட்டான். இரவு முழுவதும் எல்லோரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

★ ★ ★

### மீண்டும் கைவிடப்பட்டோம்

காலையில் வந்த இன்ஸ்பெக்டரின் முகம் சுருங்கியிருந்தது. “உங்களை விடும்படி கேட்டேன். உனக்கென்ன அக்கறை?” என்று என்மேல் மேலதிகாரிகள் சந்தேகப்படுகிறார்கள். இனி என்னால் ஒன்றும் செய்ய முடியாது உங்களைச் சிறையில் அடைக்கும் படி உத்தரவாகியிருக்கிறது. ஒரேயொரு உதவியை மட்டும் நான் செய்யலாம் மாலை வரை ஜெயிலுக்குள் போகாமல் என் அறையில் நீங்கள் தங்கியிருங்கள். எனது தொலைபேசியைத் தருகிறேன் உங்களுக்குத் தெரிந்த யாரையும் தொடர்பு கொண்டு உங்களை வந்து மீட்கச் சொல்லுங்கள். இரவு நான் எப்படியும் உங்களை ஜெயிலில் போட வேண்டி வரும். போட்டால் மூன்று கிழமைக்கு நீங்கள் வெளியே வரமுடியாது. அதற்குள், ஏதாவது செய்து தப்பப் பாருங்கள்” என்று அனுதாபத்தோடு கூறிச் சென்று விட்டார்.

★ ★ ★

### சிறையிருந்தோம்

தொலைபேசியூடாக கொழும்பில் தெரிந்த ஒரு சிலருடன் தொடர்பு கொண்டோம். யாரும் எங்களுடன் பேசவே விரும்பவில்லை. வித்துவான் வேலனுடன் பேசினோம். “முருகனைக் கும்பிடுங்கள் அவன் பார்த்துக் கொள்வான்” என்றார். சலிப்பாய் இருந்தது. கம்பன் கோட்டச் செய்தி தவறென்று வித்துவான் வேலன் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் எழுதப் போக, அவர் வீட்டை இராணுவம் குடைந்திருந்தது. அந்த அச்சத்தில் இருந்தார் அவர். காலை ஒன்பது மணியிருக்கும் ஒரு பொலிஸ்காரன் வந்து எங்கள் பெயர்களைச் சொல்லி அழைத்தான். புதியவனாய் இருந்தான். அருகில் சென்று என்னவென்று கேட்டோம். “உங்கள் பெயர் ஜெயில் பதிவேட்டில் பதிவாகியிருக்கிறது. ஆகவே உங்களை ஜெயிலில் போட வேண்டும்” என்றான். பதறிப் போனோம். எல்லோரையும் சப்பாத்து, பெல்ற் முதலியவற்றைக் கழற்றச் சொல்லி அவற்றை வாங்கிக் கொண்டான். பின்னர் பொலிஸ் நிலையத்திற்குள்ளேயே இருந்த, ஒரு ஜெயிலுக்குள் அனைவரையும் ஒன்றாக விட்டு கதவைப் பூட்டினான்.

★ ★ ★

### ஸ்ரீதரசிங் மயங்கினார்

எல்லோரும் ஒன்றாய் இருந்தபடியால் எங்களுக்கு அதிகம் பயம் வரவில்லை. ரகுபரன் “கண்ணன் பிறந்ததும் சிறைச்சாலை” என்ற, பாட்டைப் பாடத் தொடங்க, எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தோம். திடீரெனப் பார்த்தால் ஸ்ரீதரசிங் மூச்செடுக்க முடியாமல் மயக்க நிலையை அடைந்து கொண்டிருந்தார். பதறிப்போனோம். பூட்டிய அறைக்குள் இருந்தால் அவருக்கு அப்படி வருமாம். டாக்டர் ரத்தினகுமார் அவருக்கு முதலுதவி செய்து, எழுந்து உட்கார வைத்தார்.

★ ★ ★

### சாத்திரம் சரியானது

நான் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படுவதன் முன் ஒரு நாள், பிரசாந்தனின் தந்தையிடம் எனது சாதகத்தைக் காட்டினேன். அவர் நல்ல சோதிடர். என் சாதகத்தைப் பார்த்து விட்டு, “உங்களுக்கு இப்போது மூன்றில வியாழன், ஐஞ்சில சனி, இதன்படி நீங்கள் சிறையில் இருக்க வேண்டும்” என்றார். இயக்கத்தின் முரண்பாடும் இருந்தபடியால் யாழ்ப்பாணத்தில் அத்தகைய சூழ்நிலை வந்து விடுமோ என அஞ்சினேன். அங்கு ஒன்றும் நடக்கவில்லை. கொழும்பு வந்ததும் இனிப் பயமில்லை என நினைத்தேன். ஆனால் அங்கு தான் விதி விளையாடி என்னை ஜெயிலில் இருக்க வைத்தது.

★ ★ ★

(தொடரும்...)

# தேசிய அரசின் பின்னடைவிற்கு பிரதமர் ரணில் காரணமல்லர்!

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



கொழும்பு, பெப். 15

தற்போதைய தேசிய அரசு அரசியல் ரீதியாக மோசமான பின்னடைவை சந்தித்ததற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காரணம் அல்லர் என்று பாரிய அபிவிருத்தித் திட்ட மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எனினும், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் மூலம் மக்கள் அரசுக்கு பாரதூரமான செய்தியை தெரிவித்துள்ளனர். இதனைப்புரிந்து கொண்டு தவறுகளைச் சரி செய்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியிடம் ஆளும் தேசிய அரசின் பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் படுதோல்வியைச் சந்தித்துள்ளன.

இந்தத் தோல்விக்கு ஐக்கிய தேசியக்கட்சியின்தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளும் அவரது சகாக்களால் மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கி பிணை முறி மோசடியுமே காரணம் எனக் குற்றம் சாட்டிவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், பிரதமர் பதவியிலிருந்து ரணிலை விலகுமாறும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களும் இதே குற்றச்சாட்டை முன்வைத்துவருவதுடன் சில ஊடகங்களும் ரணிலை பிரதமர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் தேசிய அரசை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்த ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆளும் கட்சிகளின் தேர்தல் தோல்விக்கு பிரதமரை குற்றம்சாட்ட முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது இணக்கப்பாட்டுடன் அரசின் செயற்திட்டங்களை ஒழுங்கமைத்து துரிதமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன்மூலம் அதிருப்தியடைந்துள்ள மக்களையும் தேசிய அரசை அமைப்பதற்கு உழைத்த தரப்பினரினதும் மனங்களை வெல்லமுடியும்.

அவ்வாறு செயற்படத் தவறினால் இதனைவிட மோசமான பின்னடைவைச் சந்திக்க நேரிடும்.

அதேவேளை, ஊழல் மோசடிக்காரர்களுக்கு தகுந்த தண்டனையை வழங்குவதற்கு விசேட மேல்நீதிமன்றமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளேன்.

இனியும் தாமதப்படுத்தாது அந்த நீதிமன்றத்தை அமைத்து ஊழல் மோசடிக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# களனிவெளி ரயில் பாதை மூடப்படும்

### நாளை முதல் 19 ஆம் திகதி வரை



கொழும்பு, பெப். 15

களனிவெளி ரயில் பாதை 16 ஆம் திகதி இரவு 8 மணி முதல் 19ம் திகதி மாலை 4 மணி வரை மூடப்படும் என மேலதிக ரயில்வே முகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் சனி ஞாயிறு தினங்களில் இந்தப் பாதையினூடான அனைத்து ரயில் சேவைகளும் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதையின் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வேலைகள் காரணமாக இவ்வாறு இந்தச் சேவைகள் நிறுத்தப்படுகின்றன என்றும் இதன் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளுக்கு ரயில்வே திணைக்களம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்றும் மேலதிக ரயில்வே முகாமையாளர் விஜய சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகன வேகத்தை கட்டுப்படுத்துவதற்கான வேக அளவீட்டு இயந்திரக் கட்டமைப்பு!

கொழும்பு, பெப். 15

நாட்டிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் வாகன வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வேக அளவீட்டு இயந்திரக்கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இது செயற்படுத்தப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வாகன வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டமைப்பு, அதிவேக நெடுஞ்சாலைப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது என்பதோடு, வாகனத்தின் வேகத்தை கண்காணிப்பதுடன் வேக வரையறையை மீறும் வாகனங்களின் புகைப்படங்கள் உடனடியாக ரெப் கணினியின் ஊடாக பிரதிபண்ணப்படும்.




அத்தோடு, வாகன இலக்கம், கண்காணிக்கப்பட்ட நேரம், அதிவேகம் தொடர்பான தகவல்களும் அச்சிடப்படும்.

வருடாந்தம் அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெறும் விபத்துக்களில் 27சத வீதமானவை அதிக வேகத்தால் இடம்பெறும் விபத்துக்களாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# இரு வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இருவர் பலி!

கொழும்பு, பெப். 15

கொழும்பு - கண்டி வீதியின் கடவத்தை, கிரில்லவல பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் 24 வயதான இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் வந்த காரில் மோதியதால், இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே மன்னார் - மதவாச்சி வீதியில் தனியார் பஸ்ஸில், மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 56 வயதான நபரே பலியாகியுள்ளார். சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார், பஸ் சாரதியை கைது செய்துள்ளனர்.

# மலையகத்தில் மஹா சிவராத்திரி



கொழும்பு, பெப். 15

உலகளாவிய ரீதியில் இந்துக்கள் மஹா சிவராத்திரி விரதத்தை பக்திபூர்வமாக நேற்றுமுன்தினம் அனுஷ்டித்தனர்.

அந்த வகையில், இலங்கையிலும் அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளன.

மலையகத்தில் அக்கரப்பத்தனை ஹோல்புறுக் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலும், சிவராத்திரி நிகழ்வுகள் பக்திபூர்வமாக இடம் பெற்றன.

அக்கரபத்தனை பிரதேசம் வாழ் இந்துக்கள் பெருமளவில் இந்தப் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

இரவு முழுவதும் ஆலயத்தில் தங்கியிருந்து விசேட பூஜை நிகழ்வுகளில் பங்கேற்று இறைவனின் சித்திகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, கலை நிகழ்வு களும் விசேட ஆன்மிகச் சொற்பொழிவுகளும் அங்கு நடைபெற்றன.

(க)

21.Please give me a ruler தயவுசெய்து எனக்கு ஒரு அடிமட்டம் தாருங்கள

22.Please go out தயவுசெய்து வெளியே போங்கள்

23.Please stop there தயவுசெய்து அங்கே நிறுத்துங்கள்

24.Please sit down தயவுசெய்து இருங்கள்

25.Please stand up தயவுசெய்து எழும்புங்கள்

26.Please be silent தயவுசெய்து அமைதியாக இருங்கள்

27.Please open your book தயவுசெய்து உங்கள் புத்தகத்தை திறவுங்கள்

28.Please look at the picture தயவுசெய்து படத்தை பாருங்கள்

29.Please wipe your feet தயவுசெய்து உங்கள் பாதங்களை துடையுங்கள்

30.Please wipe your nose தயவுசெய்து உங்கள் மூக்கை துடையுங்கள

31.Please give me a piece of paper தயவுசெய்து எனக்கு ஒரு கடதாசி தாருங்கள்

32.Please give me a piece of chalk தயவுசெய்து எனக்கு ஒரு வெண்கட்டி தாருங்கள்

33.Please clean the black board தயவுசெய்து கரும்பலகையை சுத்தம் செய்யுங்கள்

## சிங்களமும் தமிழும்...

| | | | |
|---|---|---|---|
| 1. எ(க்)க | ஒன்று | 11. எகலொஹ | பதினொன்று |
| 2. தெ(க்)க | இரண்டு | 12. தொலஹ | பன்னிரண்டு |
| 3. துன | மூன்று | 13. தஹதுன | பதின்மூன்று |
| 4. ஹ(த்)தற | நான்கு | 14. தாஹ(த்)தற | பதின்நான்கு |
| 5. பஹ | ஐந்து | 15. பஹலொவ | பதின்ஐந்து |
| 6. ஹய | ஆறு | 16. தாசய | பதினாறு |
| 7. ஹ(த்)த | ஏழு | 17. தாஹ(த்)த | பதினேழு |
| 8. அ(ட்)ட | எட்டு | 18. தாஅ(ட்)ட | பதினெட்டு |
| 9. நவய | ஒன்பது | 19. தாநவய | பத்தொன்பது |
| 10. தஹய | பத்து | 20. விஸ்ஸ | இருபது |





# கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் பரீச்சைக்கானவை

தரம்-5

## பழமொழிகள்

- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
- இங்கே தலை காட்டுகிறான், அங்கே வால் காட்டுகிறான்.
- இஞ்சி இலாபம் மஞ்சளில்.
- இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
- இட்ட உறவு எட்டு நாளைக்கு நக்கின உறவு நாலு நாளைக்கு.
- இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.
- இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்.
- இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
- இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே.
- இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே.
- இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை
- இராச திசையில் கெட்டவனுமில்லை
- இராசா மகளானாலும் கொண்டனுக்கு பெண்டுதான்.
- இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இரா.
- இராமனைப்போல் இராசா இருந்தால் அனுமானைப்போல் சேவகனும் இருப்பான்.
- இருவர் நட்பு ஒருவர் பொறை.
- இல்லாது பிறாவது அள்ளாது குறையாது.
- இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?
- இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று.
- இளங்கன்று பயமறியாது
- இளமையிற் கல்வி கல் மேல் எழுத்து.
- இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்.
- இறங்கு பொழுதில் மருந்து குடி

- ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில்.
- ஈட்டி எட்டு முழம் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.
- ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
- ஈர நாவிற்கு எலும்பில்லை

- உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
- உடம்பு போனால் போகிறது கை வந்தால் போதும்.
- உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
- உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
- உடைத்த சங்கு ஊதுப் பறியுமா?
- உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
- உட்கார்ந்தால் அல்லவா படுக்க வேண்டும்.
- உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இராது.
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
- ” உண்ணீர் உண்ணீரென்றே ஊட்டாதார்
  தம் மனையில் உண்ணாமை கோடி பெறும் ”
- உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும்.
- உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?
- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- உலோபிக்கு இரட்டை செலவு.
- உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.
- உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது.
- உளவு இல்லாமல் களவு இல்லை.
- உள்ளது சொல்ல ஊருமல்ல நல்லது சொல்ல நாடுமல்ல
- உள்ளது போகாது இல்லது வாராது.
- உள்ளம் தீயெரிய உதடு பழஞ் சொரிய
- உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்
- உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது.
- இதனை இப்படி கூட கூறுவார்கள்-
  பார்க்காத உறவும் கேட்காத கடனும் பாழ்



## Requests

01.May I come in? நான் உள்ளே வரலாமா?

02.May I go out? நான் வெளியே போகலாமா?

03.May I go home? நான் வீட்டிற்கு போகலாமா?

04.May I go to the toilet? நான் கழிவறைக்கு போகலாமா?

05.May I go to the office? நான் அலுவலகத்திற்கு போகலாமா?

06.May I go to the canteen? நான் சிற்றுண்டிசாலைக்கு போகலாமா?

07.Silence Please தயவுசெய்து அமைதியாக இருங்கள்

08.Listen to me please தயவுசெய்து அவதானியுங்கள்

09.Hurry up please தயவுசெய்து விரவாக வாருங்கள்

10.Be careful கவனமாக இருங்கள்

11.Please do your home work தயவுசெய்து உங்களுடைய வீட்டு வேலையை செய்யுங்கள்

12.Please try to be clean தயவுசெய்து சுத்தம் செய்ய முயற்சியுங்கள்

13.Tell your parents உங்கள் பெற்றோரிடம் கூறுங்கள்

14.Go home stright நேராக வீட்டிற்கு போங்கள்

15.Don't shout please தயவுசெய்து சத்தம் போடாதீர்கள்

16.Please come to school every day தயவுசெய்து பாடசாலைக்கு ஒவ்வொருநாளும் வாருங்கள்

17.Please try to be good தயவுசெய்து நல்லவராக இருங்கள்

18.Please think about others தயவுசெய்து வேறு விடயங்களை யோசியுங்கள்

19.Please give me a pencil தயவுசெய்து எனக்கு ஒரு பென்சில் தாருங்கள்

20.Please give me a book தயவுசெய்து எனக்கு ஒரு புத்தகம் தாருங்கள

21.Please give me a ruler தயவுசெய்து எனக்கு ஒரு அடிமட்டம் தாருங்கள

22.Please go out தயவுசெய்து வெளியே போங்கள்

# டென்மார்க் இளவரசர் ஹென்றிக் மரணம்



டென்மார்க்,பெப்.15

டென்மார்க் அரசி மார்க்ரெட் டின் கணவரான இளவரசர் ஹென்றிக் உடல் நலக்குறைவால் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார் என அரச மாளிகை வட்டாரம் தெரிவித்துள்ளது.

டென்மார்க் அரசியாக இருந்து வருபவர் மார்க்ரெட். இவரது கணவர் இளவரசர் ஹென்றிக். இந்தத் தம்பதியினருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். 83 வயதான ஹென்றிக் கடந்த சில மாதங்களாக மூளைக் கட்டி நோயாலும், உடல் நலக் குறைவாலும் அவதிப்பட்டு வந்தார். இதையடுத்து, கோபன் ஹேகனில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், இளவரசர் ஹென்றிக் உடல் நலக்குறைவால் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார் என அரண்மனை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரண்மனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

எங்கள் மதிப்புக்குரிய இளவரசர் ஹென்றிக் ஆழ்ந்த உறக்கத்திலேயே மரணம் அடைந்தார் எனத் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, குளிர்கால ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்த டென்மார்க் பட்டத்து இளவரசரான பிரடெரிக் அவசரமாக நாடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்கொரிய முன்னாள் அதிபரின் தோழிக்கு 20 ஆண்டுகள் சிறை



சியோல்,பெப்.15

தென்கொரிய முன்னாள் அதிபர் பார்க் கியூனின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில், அரசவிவகாரத்தில் தலையிட்டு ஆதாயம் பெற்ற குற்றத்திற்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் அதிபராக இருந்த பார்க் கியூனின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரச விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றார் எனவும், அரசின் மிக முக்கிய இரகசியக் கோப்புகளை ஆய்வு செய்து வருகின்றார் எனவும் குற்றச்சாட்டுகள் கிளம்பின.

மேலும், அதிபருடன் தனக்குஇருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி, பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளைப் பெற்று, இவர் ஆதாயம் அடைந்து வந்தார் என அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தின.

அதையடுத்து, கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதி சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். மேலும், நாடாளுமன்றத்தில் பார்க் கியூன் ஹேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு மார்ச் 10ஆம் திகதி அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சியால் மாவட்ட நீதிமன்றத்தில் சோய் சூன் சில் மீது குற்ற விசாரணை நடந்து வந்த நிலையில், தன் மீதான குற்றச்சாட்டுகளை அவர் ஒப்புக்கொண்டார். இந்த நிலையில், அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# பதவி விலக மறுத்த அதிபர் ஜேக்கப் ஜூமா: அரசியல் நெருக்கடிக்குள் தென்னாபிரிக்கா

கேப் டவுன்,பெப்.15

தென்னாபிரிக்காவில் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கிய அதிபர் ஜேக்கப் ஜூமா பதவி விலக மறுத்ததால் அவரைப் பதவியில் இருந்து நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆட்சியில் உள்ளது. ஜனாதிபதியாக ஜேக்கப் ஜூமா பதவி வகித்து வருகிறார். அவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருப்பதால், தலைமையை மாற்றக் கட்சி திட்டமிட்டது. ஆளுங்கட்சி எம்.பி.க்களே அவருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். ஆனால் எதற்கும் பிடிகொடுக்காத ஜூமா, தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். நம்பிக்கை வாக்கெடுப்பிலும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதவியைத் தக்க வைத்துக்கொண்டார்.

இதையடுத்து கடந்த டிசெம்பர் மாதம் துணை ஜனாதிபதியான சிரில் ராம்போசா, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.



இதனால் அவர் 2019 பொதுத் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனத் தெரிகிறது. ஆனால் பெரும்பாலான எம்.பி.க்கள் மற்றும் நிர்வாகிகளின் எண்ணம், ஜேக்கப் ஜூமா தேர்தலுக்கு முன் பதவி விலக வேண்டும் என்பதுதான்.

ஜேக்கப் ஜூமா மீதான அதிருப்தி நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அவரை உடனடியாகப் பதவி விலக வைப்பது தொடர்பாக துணை ஜனாதிபதி ராம்போசா பலமுறை சந்தித்துப் பேச்சு நடத்தினர். திங்கட்கிழமை இரவு மீண்டும் பேச்சு நடத்தினர். ஆனால் அவர் பதவி விலகுவதாகத் தெரியவில்லை.

இதையடுத்து ஜேக்கப் ஜூமாவை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக, கட்சியின் தேசிய செயற்குழுவில் வாக்கெடுப்பு நடத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தகவலை கட்சியின் பொதுச்செயலாளர் ஏஸ் மகாஷூலே தெரிவித்தார். இந்த முடிவு ஆளுங்கட்சியின் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை ஆகும். இவ்வாறான நிலையிலும் ஜேக்கப் ஜூமாவின் ஜனாதிபதி பதவிக்கு இது எந்த வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

# ரோஹிங்கியா பிரச்சினையை சூகி புரிந்து கொள்ளவில்லை



பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் கவலை

யாங்கூன்,பெப்.15

ரோஹிங்கியா பிரச்சினையை சூகி புரிந்து கொள்ள வில்லையென பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் கவலை தெரிவித்துள்ளார்.

மியன்மாரில்ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது இராணுவம்நடத்திவரும் ஒடுக்குமுறைகளுக்குப் பல உலக நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், பிரிட்டன்வெளியுறவுத் துறை அரமச்சர் போரிஸ் ஜோன்சன் அரசு முறைப் பயணமாக மியன்மார் சென்றுள்ளார். நேற்று முன்தினம் மியன்மார் அரசு ஆலோசகர் ஆங் சாங் சூகியை சந்தித்துப் பேசினார். இருவரும் ரோஹிங்கியாப் பிரச்சினை தொடர்பாகப் பேசினர்.

அதன்பின்செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த ஜோன்சன்-

ரோஹிங்கியாமக்கள் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. உண்மையில் ரோஹிங்கியா பிரச்சினை பற்றிச் சூகி முழுவதும் புரிந்து கொண்டாரா எனத் தெரியவில்லை. அவர் ஹெலிகொப்டரில் சென்று நாங்கள் பார்த்த காட்சிகளைப் பார்க்க வேண்டும். அவருடைய தலைமையில் நம்பிக்கை உள்ளது. ஆனால் இங்கு நடக்கும் பிரச்சினையைப் பார்க்கும் போது மிகுந்த கவலையளிக்கிறது.

மேலும் இது போன்ற கொடூரத்தை நான் என் வாழ்நாளில் பார்த்தது இல்லை. நூற்றுக்கணக்கான கிராமத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குச்சரியானதலைமை இல்லை. ஐக்கிய நாடுகள் நிறுவனத்துடன் இணைந்து மக்களைத் தங்கள் சொந்த இடத்திற்குக் கொண்டுவர வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார். (க)

# இரசாயன ஆயுதப் பாவனை நிரூபிக்கப்பட்டால் தாக்குதல்

பரீஸ்,பெப்.15

சிரியாவில் அதிபர் பஷார் அல் அசாத் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. அந்நாட்டில் அதிபருக்கு எதிராகப் பொதுமக்களில் சிலர் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் வன்முறையாளர்களைக் கட்டுக்குள் கொண்டுவர இராணுவம் பயன்படுத் தப்பட்டது. சிரியாவில் கடந்த 7 வருடங்களாக அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்த நிலையில் பொதுமக்களுக்கு எதிராக சிரிய அரசு தடை செய்யப்பட்ட இரசாயன ஆயு தங்களைப் பயன் படுத்தியது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



சிரியாவுக்கு பிரான்ஸ் எச்சரிக்கை

இது பற்றி பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறும்பொழுது-

பல்வேறு முறை குளோரின் போன்ற இரசாயனங்களைக் கடந்த சில வாரங்களில் பொது மக்களுக்கு எதிராக சிரிய அரசு பயன்படுத்தியுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அது பற்றிய சான்றுகள் வெளியாகவில்லை. அப்படி வெளியானால் நாங்கள் சிரியா மீது போர் தொடுப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# பழைய தொழிலுக்கே ஓ.பி.எஸ். அனுப்பி வைக்கப்படுவார் - தினகரன்

ஓ.பி.எஸ். இனி வரும் தேர்தலில் போட்டியிடும் தொகுதியில் கட்டுப்பணம் இழப்பார் எனவும் பின்னர் அவர் ஏற்கனவே என்ன தொழில் செய்தாரோ அந்தத் தொழிலுக்கே அனுப்பி வைக்கப் படுவார் எனவும் எம்.எல்.ஏ. தினகரன் தெரிவித்துள்ளார்.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னம் தோல்வி அடைந்ததற்கு காரணம் ஓ.பன்னீர்செல்வத்தின் சுயநலம்தான். அரசியலில் இருந்து அவர் விரைவில் ஓரங்கட்டப்படுவார்.

வரும் தேர்தலில் அவர் போட்டியிடும் தொகுதியில் கட்டுப்பணம் இழப்பார்.



பின்னர் அவர் ஏற்கனவே என்ன தொழில் செய்தாரோ (தேநீர் கடை) அந்தத் தொழிலை செய்ய அனுப்பி வைக்கப்படுவார்.

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் மட்டுமின்றி தமிழகத்தில் உள்ள எல்லா துறைகளிலும் ஊழல் நடந்துள்ளது. ஊழல் நிறைந்த இந்த ஆட்சியை மக்கள் விரைவில் அகற்றுவார்கள்.

தமிழகத்தில் ஒருபோதும் காவி ஆட்சி வராது. நாம் பொங்கல் பண்டிகைக்கு வீடுகளில் காவி நிறத்தை அடிப்போம். அதைத்தான் சொல்லி இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## ஸ்டாலினை முதல்வர் ஆக்குவதே இலட்சியம்



வைகோ பேச்சு

மு.க.ஸ்டாலினை முதல்வர் ஆக்குவதே என் லட்சியம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக தி.மு.க.வுக்காக உழைத்துள்ளேன். எத்தனை கட்சிகள் முளைத்தாலும், தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது. எனக்கு அடையாளம் கொடுத்தவர் கருணாநிதி. திராவிட இயக்கத்தைக் காப்பதற்கு தி.மு.க.வை ஆதரிப்பதுதான் எனது கடமையாகும்.

திராவிட இயக்கம் இல்லாத தமிழகம் என்று சிலர் பேசுகிறார்கள். இந்தத் திராவிட இயக்கத்தை அழிக்க நினைத்தால் வேலும், வாளுமாக நின்று தடுப்பேன்.

திராவிட இயக்கத்தை என் உயிருக்கு மேலாக நேசிக்கிறேன். நான் தி.மு.க.வில் இருந்த போதும், தி.மு.க. கூட்டணியில் இருந்த போதும் பலமுறை வெற்றி பெற்றதை மறைத்து விட்டு சிலர் விமர்சனம் செய்கிறார்கள். எதையும் எதிர்பாராமல் களத்தில் நிற்கும் தி.மு.க. ஆட்சிக்கு வரவேண்டும் என்பது தான் என் குறிக்கோள்.

எனக்குப் பதவி ஆசை கிடையாது. மு.க.ஸ்டாலினை முதல்வர் ஆக்க வேண்டும் என்பது தான் என் லட்சியம். மத்தியில் ஆளும் மோடியின் ஆட்சி நாட்டுக்குக் கேடு. மாநிலத்தில் ஆளும் அ.தி.மு.க. அரசு மோடி அரசின் கொத்தடிமையாக செயற்பட்டு வருகிறது. இந்த அரசை தூக்கி எறிய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## இனி நடிக்கும் எண்ணம் இல்லை



கமலஹாசன் அதிரடி

இனி திரைப்படங்களில் தொடர்ந்து நடிக்கப்போவதில்லை என நடிகர் கமலஹாசன் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 21 முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன் எனவும் அன்றைய தினம் கட்சியின் பெயரை அறிவிக்கப்போகிறேன் எனவும் நடிகர் கமலஹாசன் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஹவாட் பல்கலைக் கழகத்தில் கிராமங்களை தத்தெடுப்பது தொடர்பாப் பேசியுள்ளேன் எனவும், கிராமங்களுக்கு உதவும் எண்ணம் அரசியல்வாதிகளிடம் குறைந்து விட்டது என தெரிவித்திருந்த கமலஹாசன், அமெரிக்காவின் ஹவாட் பல்கலைக்கழகத்தில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

வெளிவர இருக்கும் இரு படங்களைத் தொடர்ந்து நடிக்கும் எண்ணம் இல்லை என்றும் தீவிர அரசியலில் ஈடுபடப்போகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை நாளை தமிழர்களுடைய தாக, மக்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய பிரதேசமாக, மாற்றிக் காட்டுவதே தமது கனவு என்றும் நற்பணி மன்றங்கள் மூலம் அங்கு மிங்கும் செய்து வந்த பணிகளை, தற்போது மையத்தில் நின்று மேற்கொள்ள இருக்கிறேன் எனக் கமல் தெரிவித்திருந் தமை குறிப்பிடத் தக்கது.

# இந்தியாவில் தாக்குதல் நடத்த பாக். தீவிரவாதிகள் திட்டம்

## அமெரிக்கா எச்சரிக்கை


இந்தியாவில் தாக்குதல் நடத்தப் பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என அமெரிக்கா புலனாய்வுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அது தொடர்பாக அமெரிக்கத் தேசிய புலனாய்வு இயக்குநர் டான் கோட்ஸ் பேசியவை வருமாறு:-

பாகிஸ்தான் தற்போது அதிநவீன ஆயுதங்களை உருவாக்கி வருகிறது. புதிய ரக அணுகுண்டுகளை உருவாக்கியுள்ளது. மேலும் குறுகிய தூரத் தாக்குதல் நடத்தும் அதிநவீன ஆயுதங்களையும் உருவாக்கி இருக்கிறது.

கடல் வழியாகத் தாக்கும் ஏவுகணைகள், ஆகாயவழி ஏவுகணைகள் மேலும் நீண்டதூர ஏவுகணைகள் ஆகியவற்றை புதிதாக உருவாக்கியுள்ளது.

இது இந்தியா உள்ளிட்ட ஆசிய பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் இருக்கின்றது. பாகிஸ்தான் இந்தியாவுடன் உள்ள நட்புறவை நீடிக்க விரும்பவில்லை. அதிலிருந்து விலகிச் சென்று வருகின்றது. மேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்தியா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் இரு அண்டை நாடுகளுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்து வருகிறது.



அத்துடன் இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதிகளை பாகிஸ்தான் ஊக்குவித்து வருகிறது. இதன் மூலம் இந்தியா முழுவதும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் விரிவான தாக்குதல் நடத்துவதற்கு தயா ராகி வருகிறார்கள். இதன் காரணமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இன்னும் மோதல் போக்கை அதிகரிக்கச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் அவர்கள் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டு இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## நடிகை பிரியா வாரியர் மீது குவியும் குற்றச்சாட்டுகள்



ஒரு அடார் லவ் படத்தில் வரும் மணிக்ய மலரய்ய பூவி பாடலில் இடம்பெற்றுள்ள வரிகள் இஸ்லாமிய உணர்வுகளை புண்படுத்தும் வகையில் உள்ளன என இஸ்லாமிய அமைப்பினர் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

ஒரே வீடியோவில் இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு பிரபலமாகிவிட்டார் பிரியா வாரியர். கேரளா மட்டும் இன்றி நாடு முழுவதும் ஒரே நாளில் பிரபலமாகி விட்டார் பிரியா வாரியர்.

இந்த நிலையில் பிரியா வாரியருக்கு எதிராக இஸ்லாமிய இளைஞர்கள் ஹைதராபாத்தின் பலுக்நுமா பொலிஸ் நிலையத்தில் குற்றச்சாட்டளித்துள்ளனர். 'ஒரு அடார் லவ்' படத்தில் வரும் மணிக்யா மலரய்ய பூவி பாடலின் வரிகளில் புனித நபராம் மக்காவின் ராணியாக வாழ்வாள் என்ற வரி இடம்பெற்றுள்ளது.

இந்த வரிகள் இஸ்லாமியர்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதத்தில் இருக்கின்றன எனவும் இந்தப் பாடலில் நடித்த பிரியா வாரியர் மற்றும் பாடலை எழுதி, இசையமைத்து, பாடியவர்கள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உலக அமைதி வேண்டி 108 சிவலிங்கங்கள்



உலக அமைதி வேண்டி பூரி கடற்கரையில் மகா சிவ ராத்திரியன்று மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் 108 சிவலிங்கங்களை வடிவமைத்துள்ளார்.

மகா சிவராத்திரி தினம் நேற்றுமுன்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி ஒரிசா பூரி கடற்கரையில் மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் 108 சிவலிங்கங்களை வடிவமைத்துள்ளார். மணலில் 5 அடி சிவபெருமான் சிலையை செய்து அதனை சுற்றி 2 அடி உயர 108 சிவலிங்கங்களை எட்டு மணி நேரத்தில் வடித்துள்ளார். உலக அமைதியை முக்கிய நோக்கமாகக் கொண்டே சிவலிங்கங்களை வடிவமைத்தேன்'' என்றார் அவர்.

### போர்ட் எலிசபெத் கிரிக்கெட் போட்டி:

# ஒருநாள் தொடரை வென்று இந்தியா வரலாற்றுச் சாதனை



தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியில் 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி, ஒருநாள் தொடரை 4:1 எனக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

இந்தியா – தென்னாபிரிக்கா இடையிலான 5ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி போர்ட் எலிசபெத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா அணிகட்டன் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். தவான், ரோகித் சர்மா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ரோகித் சர்மா நிதானமாக விளையாட தவான் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தவான் 23 பந்தில் 8 பவுண்டரியுடன் 34 ஓட்டங்கள் எடுத்து ரபாடாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரோகித் சர்மா உடன் விராட் கோஹ்லி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ரோகித் சர்மா 50 பந்தில் அரைசதம் அடித்தார். விராட் கோஹ்லி 36 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரகானேவும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

புவனேஸ்வர் குமார் கடைசி வரை நின்று 19 ஓட்டங்கள் அடிக்க இந்தியா 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 274 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால் தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு 275 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது தென்னாபிரிக்கா அணி சார்பில் நிகிடி 9 ஓவரில் 51 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.



அதைத்தொடர்ந்து 275 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்க அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஹாசிம் அம்லாவும், எய்டன் மக்ரமும் களமிறங்கினர். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் குவித்தனர். மார்க்ரம் 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய டுமினி ஒரு ஓட்டங்களிலும் , டி வில்லியர்ஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன்பின் அம்லா உடன் மில்லர் ஜோடி சேர்ந்தார்.

சிறப்பாக விளையாடிய அம்லா அரைசதம் கடந்தார். மில்லர் 36 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சஹால் பந்தில் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஹெய்ன்ரிச் கிளாசென் களமிறங்கினார். நிதானமாக விளையாடிய அம்லா 71 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் எதிர்பாராத விதமாக ஆட்டமிழந்து வெளியேறினார். அதன்பின் களமிறங்கியவர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் தென்னாபிரிக்கா அணி 201 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன்மூலம் இந்திய அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.

இந்திய அணியின் பந்து வீச்சில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்களும், பண்டையா, சஹால் ஆகியோர் 2 விக்கெட்களையும், பும்ரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இந்திய அணியின் ரோகித் சர்மா ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணி ஒருநாள் தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும்.

### 3ஆவது ஒருநாள் போட்டி:



# ஸிம்பாப்வே அணியை வீழ்த்தியது ஆப்கன்

ஸிம்பாப்வேக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான 2 ரி –20 மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. முதலில் நடைபெற்ற ரி – 20 தொடரை ஆப்கானிஸ்தான் அணி 2:0 எனக்கைப்பற்றியது. அதைத்தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானும், இரண்டாவது போட்டியில் ஸிம்பாப்வேயும் வெற்றி பெற்றன.

இந்த நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் சார்ஜாவில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற ஸிம்பாப்வே அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி ஸிம்பாப்வே அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஹமில்டன் மசகாட்சா, சாலொமன் மிரே ஆகியோர் களமிறங்கினர். மசகாட்சா 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் களமிறங்கிய பிரண்டன் டெய்லர் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அவரைத்தொடர்ந்து சாலொமன் மிரே 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் கிரேக் எர்வின், சிகந்தர் ரசா ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். சிறிது நேரம் நிதானமாக விளையாடிய இந்த ஜோடியை ரஷித் கான் பிரித்தார். எர்வின் 39 ஓட்டங்களிலும், ரசா 38 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ரஷித் கான் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி ஆட்டமிழந்தனர்.

ஸிம்பாப்வே அணி 34.3 ஓவர்களில் 154 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஆப்கானிஸ்தான் அணி பந்துவீச்சில் ரஷித் கான் 5 விக்கெட்களும், முஜீப் சத்ரான் 3 விக்கெட்களும், குல்பாதின் நயிப், தவ்லத் சத்ரான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

அதைத்தொடர்ந்து 155 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது.

ஆப்கானிஸ்தான் அணி 27.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 158 ஓட்டங்கள் எடுத்து ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



ஸிம்பாப்வே அணி பந்துவீச்சில் டெண்டாய் சதாரா 2 விக்கெட்களும், கிரேம் கிரீமர், ராயன் பர்ல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆப்கானிஸ்தான் அணியின் ரஷித் கான் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். இரு அணிகளுக்கிடையேயான நான்காவது ஒருநாள் போட்டி 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது.



### முத்தரப்பு தொடர்:

# முதலாவது வெற்றியை சுவைத்தது நியூஸிலாந்து

முத்தரப்பு ரி – 20 கிரிக்கெட் தொடரில் வெலிங்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்தை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது நியூஸிலாந்து.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ரி – 20 முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 4ஆவது ஆட்டத்தில் நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. ஆட்ட முடிவில் நியூஸிலாந்து 20 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்பிற்கு 196 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களம் இறங்கியது. தொடக்க வீரர் ஜேசன் ராய் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த தாவித் மலன், அலெக்ஸ் ஹேல்ஸ் உடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அலெக்ஸ் ஹேல்ஸ் 24 பந்தில் 47 ஓட்டங்களும், தாவித் மலன் 40 பந்தில் 59 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 184 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.



இதனால் நியூசிலாந்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தத் தோல்வியின் மூலம் இங்கிலாந்து தொடர்ச்சியாக மூன்று தோல்விகளைச் சந்தித்துள்ளது. நியூஸிலாந்து வருகிற 16ஆம் திகதி ஆஸ்திரேலியாவையும், 18ஆம் திகதி இங்கிலாந்தையும் எதிர்கொள்கிறது. இந்த இரண்டு ஆட்டங்களில் ஒன்றில் வெற்றி பெற்றால் கூட நியூஸிலாந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறி விடும். ஆஸ்திரேலியா ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

## யாழ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள உள்ளூராட்சிச் சபைகளில் உதிரிகளை இணைத்துக்கொண்டு ஆட்சியமைக்கும் திட்டத்தை ஏனையோர் மறந்துவிடவேண்டும். அவ்வாறு செய்யக்கூடாது. எமது உறுப்பினர்கள் அவ்வாறு சோரம்போகமாட்டார்கள் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் செயலாளர் என்.ஸ்ரீகாந்தா நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பருத்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றில் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. எனவே, அந்த இரு நகர சபைகளிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆட்சியமைக்கும்.

அதேபோல் யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை, கரவெட்டி பிரதேச சபை போன்றவற்றிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆட்சியமைப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இந்தச் சபைகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிகப்படியான ஆசனங்களை பெற்று முதன்மையாக இல்லாவிட்டாலும் வேறு கட்சிகளை சேர்ந்த - சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த - உறுப்பினர்கள் எங்களுடன் இணைவதற்கான விருப்பத்தை நேரடியாகத் தெரிவித்துள்ளனர்.

விருப்பம் தெரிவித்திருக்கும்உறுப்பினர்கள்எங்களுடன் இணைந்து கொள்வார்களாயின் யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேச சபை போன்றவற்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் உள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் சரியாகப் பயன்படுத்துவோம். - என்றார். (ஐ -7)

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வடக்கச்சி, பத்து வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த பாஸ்கரன் நிரோசா (வயது 24) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

அந்தக் கிராமத்தில் நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழாவுக்கு அயலவர்கள் சென்றிருந்தவேளை இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பெண் வீட்டுக்குப் பின்புறமாக கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுக்கு ஏழு வயது மகன், ஒன்றரை வயது மகள் ஆகியோர் உள்ளனர். கணவர் தொழிலுக்குச் சென்றிருந்தார் எனக் கூறப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினரும், கிளிநொச்சி குற்றத் தடயவியல் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 70)

## சபைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டீன் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச் சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆட்சி நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் தேர்தல் முறைமையால் ஏற்பட்ட குழறுபடியால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் நாங்களாகவே ஒரு யோசனையை அறிவித்தோம். எந்தக் கட்சி ஒரு சபையில் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறதோ, அந்தக் கட்சி ஆட்சியமைக்க ஏனைய கட்சிகள் இடையூறு வழங்கக்கூடாது என்று அந்த யோசனையை முன்வைத்தோம்.

அதனை ஒரு கொள்கைக் கோட்பாடாக நாம் முன்னிறுத்தியிருந்தோம். நாம் அது குறித்து எந்தக் கட்சியுடனும் பேச்சு நடத்தவில்லை. எனினும் நாங்கள் தெரிவித்திருந்த முறையை ஏற்றுக்கொண்ட நடுநிலையாளர்கள் பலர், வேறு கட்சிகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அதன் பிரதிபலனாகவோ தெரியவில்லை, யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு கட்சிகள் எமது நிலைப்பாட்டிலேயே உள்ளதாகத் தெரிவித்துள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் விரைவாகவும் தங்குதடையின்றியும் அனைத்துச் சபைகளுக்குமான நிர்வாகம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். மக்கள் சரியாகவே வாக்களித்துள்ளனர். எனினும், தேர்தல் முறைமையிலுள்ள குழறுபடி காரணமாக நிர்வாகங்களை அமைக்க முடியாத சூழ்நிலைக்கு நாம் இடமளிக்கக்கூடாது. - என்றார். (ஐ-7)

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

நாங்கள் தேர்தலை எதிர்கொண்டு, நாம் எமது வாக்கு வங்கியை ஒப்புவித்துக் காட்டியிருக்கின்றோம். எவரும் சவால் விடுக்க முடியாத வாக்கு வங்கியை உறுதிப்படுத்தியிருக்கின்றோம். அரசுக்கு எதிராக வாக்குகளைச் சேகரித்துள்ளோம்.

இதனால், சபாநாயகரே அடுத்த வாரம் நாங்கள் உங்களைச் சந்திக்க வருகிறோம். எதிர்க்கட்சியின் அதிகாரபூர்வ உரிமையை எமக்குப் பெற்றுக் கொடுங்கள். ஜனநாயகத்துக்குத் தலைவணங்குங்கள்.

இந்த அரசு மூன்று பாரதூரமான ஜனநாயக மீறல்களை மேற்கொண்டது. ஜனவரி 9ஆம் திகதி சட்ட ரீதியான அரசை வீட்டுக்கு அனுப்பியது.

தேர்தலில் தோல்வியடைந்த 12 பேரை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து அமரவைத்தது. நாடாளுமன்றத்தில் இருப்பவர்களில் 20 வீதமானவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். அமைச்சரவையிலும் மக்களால் நிராகரிக்கப்பட்ட 10 வீதமானவர்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் புண்ணியத்தில் அமைச்சர்களானவர்கள். உலகில் எங்கு இப்படி இருக்கின்றது. - என்றார். (ஐ)

## கொள்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

இந்தத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவாக நான் செயற்படவில்லை. அதனால் நீங்கள் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று எந்த ஆலோசனையையும் எந்தக் கட்சிக்கும் நான் கூறவிரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாராந்தம் வெளியிடும் கேள்வி பதில் அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவேண்டும் என்று சமய மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் வலியுறுத்திவரும் நிலையில், முதலமைச்சர் க.வீ.விக்னேஸ்வரனும் அதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்தத் தேர்தல் முடிவானது பொதுவாகக் கூறுவதானால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல கட்சிகளுக்கு வாக்குகள் பிரிந்து சென்றுள்ளமையையும் ஒரு சில மன்றங்களைத் தவிர எந்த ஒரு கட்சியும் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாமல் இருப்பதையும் உணர்த்தி நிற்கின்றது .

அதேவேளை, தமிழ் மக்கள் பொதுவாகத் தமது தலைமைகளின் மீது நம்பிக்கை இழந்து அதிருப்தியுற்றிருக்கின்றார்கள் என்பதையும் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. மாற்றம் ஒன்றை மக்கள் விரும்பியிருக்கின்றார்கள் என்பது தெளிவாகத்தெரிகிறது. இதனால்தான் சில கட்சிகளுக்கு வீழ்ச்சியும் சிலகட்சிகளுக்கு எழுச்சியும் ஏற்பட்டிருக்கின்றது.

காலாதிகாலமாக வீடு சின்னத்துக்கு வாக்களித்த பலர் தற்போதைய தலைமைத்துவத்தைப் பிடிக்காததாலோ என்னவோ அவர்கள் இம்முறை யாழ்ப்பாண மாவட்டத் தேர்தலில் ஈடுபடவில்லை என்று தெரிகின்றது.

உதாரணமாக இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் கிளிநொச்சியில் 74.82 சதவீதமும், முல்லைத்தீவில் 77.49 சதவீதமும், மன்னாரில் 81.38 சதவீதமும், வவுனியாவில் 74.03 சதவீதமுமாக இருக்க யாழ்ப்பாண மாவட்டத்தில் 70.84 சதவிகிதத்தினரே வாக்களித்துள்ளார்கள்.

சில புள்ளி விவரங்கள் இன்னும் குறைத்தே யாழ். மாவட்ட வாக்களிப்பைக் குறிப்பிடுகின்றன. அரச புள்ளி விவரங்களின் படி தமிழ் அரசுக் கட்சி 2015ஆம் ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குத் தொகை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 963. இம்முறை அந்தத் தொகை 3 இலட்சத்து 39 ஆயிரம் 675ஆக குறைந் துள்ளது. 34 சதவிகித வீழ்ச்சியைக் கண்டுள்ளது. - என்றுள்ளது. (ஐ)

## நிலநடுக்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் .

வாராந்தம் வெளியிடும் கேள்வி - பதில் அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சரான எனக்கே என்ன நடைபெறுகிறது என்று தெரியாத நிலையில் மக்களின் நிலைமை என்னவாக இருந்திருக்கும் என்று பலசமயங்களில் நான் எண்ணிப்பார்த்ததுண்டு. இவை யாவும் வெளிப்படைத் தன்மையற்ற நடைமுறைமையின் பிரதிபலிப்புக்களே. ஆகவே, இந்த உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் அரசுக் கட்சியையும் அதன் தலைமைகளையும் தம்மைத்தாமே கேள்வி கேட்கவேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளியுள்ளது என்று கூறலாம். அசைக்க முடியாது என்றிருந்தவர்கள் நிலநடுக்கத்தை அனுபவித்துள்ளார்கள்!

இனியாவது ஓரிருவர் முடிவுகளை எடுக்கும் நிலை மாற்றப்பட்டு சகலரையும் பங்குதாரர்களாக உள்வாங்கி ஆக்கபூர்வமான தீர்க்கதரிசனம் மிக்க செயற்பாடுகளைக் கட்சி வேறுபாடுகள் கடந்து முன்னெடுத்து எமது மக்களுக்கான பணியை ஆற்ற நாம் யாவரும் ஒன்று கூடவேண்டும்.

ஒரு சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் காரணமாக எமது மாகாண சபையின் நிர்வாகங்களைச் சரியான முறையில் செய்யவிடாமல் தமிழ் அரசுக் கட்சியின் ஒரு பகுதியினர் பல இடையூறுகளை ஏற்படுத்தி இருந்தனர். மேலும் எம் மக்களையும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் அந்நியப்படுத்தி இருட்டறையில் தள்ளிவிட்டுத் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப எமது தீர்வு விடயத்தை ஒரு சிலரே தனியாகக் கையாண்டார்கள்.

பதவிகளில் ஒட்டி நின்று மக்கள் நிலையறியாது இருந்தவர்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியைத் தந்துள்ளமை உண்மைதான். அதிர்ச்சியில் இருந்து விடுபடச் சில காலம் போகும். ஆனால் அவர்கள் யாவரும் தமது குறைபாட்டை முற்றாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனினும், தமது குறைபாடுகளை எமது சிங்கள, தமிழ் அரசியல் தலைவர்கள் மீளாய்வு செய்ய இது தக்க தருணமாய் அமைந்துள்ளது. - என்றுள்ளது. (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்ளாத நிலையில், மாநகர சபையின் முதல்வராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட் நேற்றுத்தெரிவு செய்யப்பட்டார். துணை முதல்வராக து.ஈசன் தெரிவானார்.

யாழ். மாநகரசபை முதல்வர் பதவி தொடர்பில் பல்வேறு ஊகங்கள் நிலவி வந்த நிலையில் ஆர்னோல்ட் முதல்வராகத் தெரிவானார்.

யாழ்ப்பாணம் - மார்ட்டீன் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் என்.ஸ்ரீகாந்தா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்துக்கு யாழ். மாநகர சபைக்குக் கூட்டமைப்பு சார்பில் தெரிவாகிய 16 உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, மாநகர சபையில் உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்வது, ஒற்றுமையுடன் செயற்படுவது, சபையை ஒழுங்காக நடத்துவது என்பன தொடர்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஆலோசனைகளை வழங்கினர்.

இதன்போது ஆர்னோல்ட் யாழ். மாநகரசபையின் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். துணை முதல்வராக ஈசன் தெரிவானார்.

சபைகளில் ஆட்சியை அமைக்கத் தாம் எதிர்ப்பு வெளியிடப்போவதில்லை என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கூறியுள்ளதால், முதற் கட்டமாக மாநகர சபையை நடத்துவதற்கான முதல்வர், துணை முதல்வர் பதவிகளுக்கு உறுப்பினர்களை இப்போது நியமித்துள்ளோம். நடக்கப்போவதைப் பின்னர் அவதானிப்போம் என இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அத்துடன் இன்று முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் கூட்டமைப்பு கைப்பற்றிய சபைகளுக்கான தவிசாளர் தெரிவுகள் இடம் பெறும் என்றும், அடுத்த இரு தினங்களில் அனைத்துச் சபைகளுக்கும் தவிசாளர்கள் தெரிவு செய்யப்பட்டுவிடுவர் என்றும் சித்தார்த்தன் மேலும் கூறினார். (ஐ - 7)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்று 20 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு நீடித்தது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேட்டபோது,

கடந்த சில மாதங்களாக முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனைச் சந்திக்க இயலாமல் இருந்தது. இந்நிலையில் நல்லெண்ணச் சந்திப்பாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

முதலமைச்சர் தேர்தல் காலங்களில் நல்ல அறிக்கைகளை வெளியிட்டிருந்தார். அதற்காகவும் இந்தச் சந்திப்பு விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாகப் பேசினோம். விசேடமாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் பின்னர் தென்னிலங்கையில் உண்டான மாற்றங்கள் தொடர்பாகப் பேசினோம். மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும் பேசினோம். தொடர்ந்து தமிழ்த் தேசிய அரசியலை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துவது தொடர்பாகவும் பேசியிருக்கின்றோம். - என்றார். (ஐ - 7)

# மைத்திரியின் அனுமதியைப் பெற்றே பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி!



## ஆறுமுகன் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சி சபைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவோம். மேலும், தேசிய அரசியலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக மாத்திரமே நாம் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்துள்ளோம்.

நுவரெலியாவின் 11 சபைகளில் கூட்டணி அமைத்து செயற்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்கள் இந்த கூட்டணியை ஏற்றுக் கொண்டுள்ளனர். காரணம் கடந்த மூன்று ஆண்டுகளாக நாம் ஆட்சியில் இல்லை.

ஆட்சியில் இருந்தவர்கள் மக்களுக்கு கொடுத்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. ஆனால், நாம் மக்களுக்கு கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிச்சயம் நிறைவேற்றுவோம். அது குறித்து மக்கள் கவலையடையத் தேவையில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நாம் அங்கத்தவராக உள்ளோம். எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எமது கூட்டணி பற்றி அறிவிக்கப்பட்டு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் நாம் தொடர்ச்சியாக எமது மக்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்வோம். அதற்கு தற்போதுள்ள புதிய தொகுதி முறை மிக சிறப்பான வாய்ப்பாக அமையும்.

அதேவேளை, போனஸ் ஆசன முறையால்தான் நாம் புரிந்துணர்வுகளை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இல்லையெனில் எம்மால் தனித்து ஆட்சி அமைத்திருக்க முடியும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று மஹிந்த தரப்பினர் தெரிவித்துள்ளனர். அவர்களது இடத்தில் இருந்து பார்க்கும் போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற அடிப்படையில் அது நியாயமானதாகும்.

எனினும், 4 வருடங்களுக்கு நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தின் படியே நாம் செயற்படுவோம்.

தொடர்ச்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்தே செயற்படுவோம். ஏனைய எந்த கட்சியிடம் இருந்து இணைந்து ஆட்சி அமைக்க யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அது தொடர்பில் பரிசீலனை செய்வதற்கும் நாம் தயாராக இல்லை.

பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி குறித்து மக்கள் அதிருப்தி அடையத் தேவையில்லை. நாம் மக்களிடம் இது தொடர்பிலான தெளிவுபடுத்தலினை விரைவில் மேற்கொள்வோம்.

மக்கள் எதிர்பார்ப்பவை மற்றும் அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படுமாக இருந்தால் அவர்கள் எந்த கூட்டணி பற்றியும் கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாமனிதர் சிவனேசனின் 10 ஆம் ஆண்டு நினைவு

மல்லாவி, பெப். 15

முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனின் 10 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நினைவு கூரப்பட்டது.



கடந்த 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி ஒரு சிவராத்திரி நாள் அன்று ராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர் தாக்குதலில் கி.சிவனேசன் உயிரிழந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகளால் மாமனிதர் என்ற கௌரவம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. இவரின் உடலம் மல்லாவியில் உள்ள அனஞ்சியன்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் பத்தாவது சிரார்த்த தினத்தன்று அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், த.தே.ம. முன்னணியின் துணுக்காய் இணைப்பாளர் பாலசுப்பிரமணியம், தமிழர்விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் புண்ணியநாதன், வவுனிக்குளம் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் றொபின் உள்ளிட்டவர்களின் ஏற்பாட்டில் சிரார்த்த தினம் நினைவிற் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன் நினைவு உரையை நிகழ்த்தியுள்ளார்.

அவர் நினைவுரை ஆற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவனேசன் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டு, பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மாமனிதர் சிவனேசனின் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுகளில் ஈடுபட்டு இருந்த பொழுது பேச்சுக்களுக்கு அரசியல் ரீதியில் வலுச்சேர்க்கின்ற செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் உறுதியாகச் செயற்பட்டுக் கொண்டு இருந்தவர் மறுபக்கத்தில் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் மிகவும் உக்கிரமாகக் குரல் கொடுத்தார்.

தன் சமூகம் சார்ந்து மிக நீண்ட காலமாக மக்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று மிகுந்த அக்கறையுடனும் அவர் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் 22 பேர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது நான்கு ஆண்டுகள் எங்களுடன் அன்பும் பண்பும் உறுதியும் மிக்க ஒருவராக சேவை செய்தவர். இப்படிப்பட்ட ஒருவரை எமது தேசம் இழந்தது என்பது அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல எங்களுடைய ஒட்டுமொத்த விடுதலைக்காக போராடிய தமிழ் சமூகத்திற்கும் ஈடுசெய்யப்படமுடியாத பெரிய இழப்பு.

தமிழ்மக்களின் தாயக விடுதலையில் உறுதியான பற்றுக்கொண்ட ஒருவர் அவர். தமிழர்களின் அடிப்படைக் கொள்கையான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை விட்டுக் கொடுக்கத்தயாராக இருக்கவில்லை.

அவரின் பயணத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் சூழ்ச்சியான முறையில் அவரை அன்று படுகொலை செய்துள்ளது. அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கின்ற வேளையில் அவரின் இலட்சியம் நிறைவேற வேண்டும்.

அதற்காக நாங்கள் அவரின் பாதையில் உறுதியாகப் பயணிப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்கின்றோம் என்றும் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

(க)

# யாழில் மிளகாய் செய்கை அமோக விளைச்சல்



யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். குடாநாட்டில் மிளகாய்ச் செய்கை அமோக விளைச்சலை கொடுத்துள்ளது.

இம் முறை அநேகமான இடங்களில் பச்சை மிளகாய் கூடுதலாக பயிரிட்டதால் தற்போது மிளகாய் அறுவடையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக மிளகாய்க்கு பற்றாக்குறை காணப்பட்டது. காலநிலை தாக்கத்தினால் இச் செய்கை பாதிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து பச்சைமிளகாய்க்கு கிராக்கி ஏற்பட்ட நிலையில் கூடுதலான செய்கையாளர்கள் இந்தச் செய்கையில் ஆர்வம் காட்டி ஈடுபட்டனர்.

எம்.ஐ. கிறீன் மிளகாய் செய்கையாளர்களுக்கு பெரும் வெற்றியை ஈட்டிக்கொடுத்துள்ளது.

(கு)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான 12 பெண்கள் வைத்தியசாலையில்

ஹற்றன், பெப். 15

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா மாணிக்கவத்தை தோட்டபகுதியில் கொழுந்து பறித்து கொண்டிருந்த 12 பெண் தொழிலாளர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 10.30 மணி அளவில் இவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெண் தொழிலாளர்கள் தேயிலை கொழுந்துபறித்துகொண்டிருந்த வேளை மரம் ஒன்றில் இருந்த குளவிக் கூடு கலைந்து பெண் தொழிலாளர்களை தாக்கியது என காயங்களுக்குள்ளான தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காயங்களுக்கு உள்ளான 12 பெண் தொழிலாளர்களும் தொடர்ந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய மட்டப் பளு தூக்கலில் வென்ற மாணவி கௌரவிப்பு!





முல்லைத்தீவு, பெப்.15

ஆசிய மட்ட பளு தூக்கல் போட்டியிலே வெற்றியீட்டிய முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவி தேவராசா தர்சிகா மற்றும் அவரைப் பயிற்றுவித்த ஆசிரியர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு செல்வபுரம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை 3.45 மணியளவில் நடைபெற்றது.

ஆசிய மட்ட பளு தூக்கல் போட்டியிலே 48 கிலோ எடைப் பிரிவிலே 90 கிலோ எடையைத் தூக்கி இலங்கைக்குப் பெருமை சேர்த்த மாணவிக்குக் கிராமத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

செல்வபுரம் கலைமகள் விளையாட்டுக் கழகம் மற்றும் செல்வபுரம் கமக்கார அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடந்தது.

இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிதிகள், பாடசாலை சமூகம், கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிகழ்வில் சாதனை மாணவி மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் முதலமைச்சரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு நினைவுக் கேடயம் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ)

# லசந்த கொலை வழக்கு; முன்னாள் டி.ஐ.ஜி. கைது



சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கின் தகவல்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார கைது செய்யப்பட்டார்.

அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி கொழும்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது கொலை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட காலத்தில் கல்கிசை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பாகவும், மேல் மாகாணம் தெற்குக்கு பொறுப்பாகவும் கடமையாற்றிய முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான பிரசன்ன நாணயக்காரவே கைது செய்யப்பட்டார். (ஐ)




# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி
யோகேஸ்வரி ரவிச்சந்திரமூர்த்தி
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி பரமேஸ்வரி இராமநாதன்
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தவர்களுக்கும்,
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தித்து நிற்கின்றோம்.

யா/இளவாலைக் கன்னியர் மடம்
பாடசாலைச் சமூகம்.







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.